REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஒகஸ்ட் 22 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 197 | Monday 22, August, 2022 | 16 பக்கங்கள் | 40/-

## வருமானம் குறைந்தோருக்கு நீர்க் கட்டணத்தில் சலுகை

**வருவாய்க்கு ஏற்ப அறவிட அரசு அவதானம்**

அதிகரிக்கப்படுகின்ற நீர்க் கட்டணத்தை, வருவாய் திறனுக்கு ஏற்ப அறவிடுவதற்கான புதிய திட்டத்தை தயாரிப்பதில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. அண்மையில் நீர்க்கட்டணம் அதிகரிப்பு தொடர்பாக யோசனையை

06

## அரசின் வேலைத்திட்டங்களுக்கு மக்களது ஒத்துழைப்பு அவசியம்

**பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு**



ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் முன்னெடுத்திருக்கும் வேலைத்திட்டங்களுக்கு அரச, தனியார் பிரிவுகள் உள்ளடங்கலாக மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். எரிசக்தி துறையில் காணப்பட்ட அடிப்படை பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட விரைவான நடவடிக்கையினால், மக்களுக்கு ஓரளவு நிவாரணம் கிடைத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

06

## வேலை செய்ய முடியாதோர் அரச சேவையிலிருந்து விலகி கொள்ளவும்

**வினயமாக கேட்டுக்கொள்வதாக ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு**



*லோரன்ஸ் செல்வநாயகம், அநுராதபுரம் தினகரன் நிருபர்*

வேலை செய்ய முடியாத அனைத்து அரசாங்க ஊழியர்களும் சேவையிலிருந்து விலகிக் கொள்ளுமாறு தாம் கேட்டுக் கொள்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அதேவேளை நாட்டின் முன்னேற்றத்திற்காக அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைப்பதே தமது நோக்கம் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அநுராதபுரம் கோல்டன் மெங்கோ ஹோட்டலில் நேற்று நடைபெற்ற அநுராதபுரம் மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி

06

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு விரைவில் விடுதலை கிடைக்கும்!

**முதற்கட்டமாக சிலருக்கு பின்னர் ஏனையோருக்கு**



"முதல் கட்டமாகக் குறிப்பிட்ட சில தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும். அதன்பின் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கி விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்" என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

06

## பாவனையாளர்களால் செலுத்தப்பட வேண்டிய

# நீர் கட்டண நிலுவை ரூ.5.2 பில்லியனாக உயர்வு

**அரசியல்வாதிகளால் 13 மில்; அதிகாரிகளால் 90 மில். நிலுவை**




*லோரன்ஸ் செல்வநாயகம்*

நாடு முழுவதிலும் 28 இலட்சம் நீர் பாவனையாளர்கள் உள்ள நிலையில், 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட நீர் பாவனையாளர்கள் நீர்க்கட்டணத்தை செலுத்தத் தவறியுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

அதேவேளை, நாடளாவிய ரீதியில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு நீர் பாவனையாளர்கள் 5.2 பில்லியன் ரூபாவை நிலுவையாக செலுத்த வேண்டியுள்ளதாகவும் அந்தத் தொகையை அவர்கள் செலுத்தத் தவறியுள்ளதாகவும் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பியல் பத்மநாதா தெரிவித்துள்ளார்.

அத்துடன் பல்வேறு மட்டங்களிலும் உள்ள அரசியல்வாதிகள், வழங்கப்பட்டுள்ள

06

**நாட்டின் எதிர்கால சுபீட்சத்திற்காக**

## சகல மக்களையும் ஒன்றிணைத்து செயற்படுவதே அரசின் நோக்கம்

**அநுராதபுரத்தில் மத வழிபாடுகளின் பின் ஜனாதிபதி கருத்து**



நாட்டின் எதிர்காலத்திற்காக அனைவரையும் ஒன்றிணைப்பதே தனது நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

06

## வரலாற்றில் முதற் தடவையாக யாழுக்கு அதிக ரயில் சேவைகள்

**விரைவில் அத்தியாவசிய பொருட்களுக்கு சரக்கு ரயில்**



**யாழ்ப்பாணத்தில் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு**

*யாழ்.விசேட நிருபர்*

அத்தியாவசிய பொருட்களை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதற்காக சரக்கு ரயில் சேவைகளை பயன்படுத்த திட்ட முன்மொழிவுகள் புகையிரத திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகிறது.

06

## தமிழ் மக்களின் அவலங்களில் தமிழ் தலைமைகள் குதூகலம்

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றச்சாட்டு**



ஏமாற்றும் தமிழ் தலைமைகள் மக்களின் அவலங்களில் குதூகல மகிழ்ச்சியடைகின்றன. அவலங்களை தீரவிடாது தடுத்து வைத்து அவர்கள் அடுத்த தேர்தல் வெற்றி குறித்து கனவு காண்கிறார்கள். ஈ.பி.டி.பி கட்சியின் அரசியல் வழிமுறை பட்டிதொட்டி எங்கும் எடுத்துச்செல்லப்பட வேண்டும் என்பதேயாகும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

06

**அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக**

## 2030 லீற்றர் பெற்றோலை கடத்த முயன்ற மூவர் கைது

**கற்பிட்டியில் கடற்படையினர் அதிரடி**



வாரியா பொல பகுதியிலிருந்து கற்பிட்டி பகுதிக்கு அனுமதிப்பத்திரமில்லாமல் சட்டவிரோதமாக பெற்றோலை லொறியொன்றில் கொண்டு செல்ல முற்பட்ட மூவர் கற்பிட்டி கடற்படைப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

06



தொழில் நிமித்தம் கம்பஹாவுக்கு சென்ற

**மலையக சிறுமி நீச்சல் தடாகத்தில் சடலமாக மீட்பு**

03



பொதுமக்களின் நலன், வசதி கருதி

**பஸ்களுக்கான புதிய முற்கொடுப்பனவு அட்டை**

03



**யாழ். பலாலி விமான நிலையம் ஊடாக இந்திய யாத்திரிகர்கள்**

வசதி வாய்ப்புகளை ஏற்படுத்த அமைச்சர் ஹரீன் திட்டம்

03

## நாடு பொருளாதார முன்னேற்றம் அடைய ரணிலே பொருத்தமானவர்

**அவரது திறமை அறிந்தே ஆதரவளித்தேன்- மஹிந்த ராஜபக்ஷ**



*லோரன்ஸ் செல்வநாயகம்*

நாட்டில் விரைவான பொருளாதார முன்னேற்றத்தை கொண்டுவரக்கூடிய திறமையான தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே. அதனால்தான் அவருக்கு நான் ஆதரவளித்தேன் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அதேவேளை, நாட்டின் தற்போதைய

06

## கோழி இறைச்சிக்கும் கட்டுப்பாட்டு விலை

**விரைவில் விதிக்க அரசு கவனம்**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



தொடர்ச்சியாக விலை அதிகரித்து வரும் கோழி இறைச்சிக்கும் கட்டுப்பாட்டு விலை விதிப்பதற்கு

06

## உள்ளூராட்சி மன்ற தேர்தல் விரைவில்

**திகதியை அறிவிக்கும் அதிகாரம் எமக்கு**



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திகதியை அறிவிக்கும் அதிகாரம் எதிர்காலத்தில் தமது ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி. புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

06

## ரஞ்சன் ராமநாயக்க அடுத்த வாரம் விடுதலை

**நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவிப்பு**



ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் சிறையில் வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்க அடுத்த வாரம் விடுதலை செய்யப்படுவார் என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் நீதி அமைச்சு வழங்கியுள்ளதாக

06

**ஜனாதிபதியின் வீடு எரியுண்ட சம்பவம்;**

## சஜித் பிரேமதாசவின் சகோதரியிடம் விசாரணை

**CID முன் ஆஜராகி வாக்கு மூலம்**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீடு எரியூட்டப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக வாக்கு மூலம் ஒன்றை வழங்குமாறு கோரி குற்றவியல் விசாரணை திணைக்களம் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் புதல்வியும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் சகோதரியுமான துலாஞ்சலி

06

## லாப் Gas விலை மேலும் குறைப்பு

**அடுத்த மாதம் முதல் எதிர்பார்ப்பு**



லாஃப் சமையல் எரிவாயுவின் விலை அடுத்த மாதம் மேலும் குறைக்கப்படும் என அக்குழுமத்தின் தலைவர் W.K.H வகபிட்டிய தெரிவித்துள்ளார். கடந்த வாரம் லாஃப் எரிவாயுவின் விலை 1050 ரூபாவால் குறைக்கப்பட்டதாகவும், அடுத்த மாதமும் அதே அளவு விலை குறைக்கப்படும் எனவும்

06

## 2030 வரை ரணிலே நாட்டில் ஜனாதிபதி

**அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை**



எதிர்வரும் 2030 ஆம் ஆண்டு வரை ரணில் விக்கிரமசிங்கவே நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகிப்பார். அதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது.

எனவே சகல கட்சிகளும் எவ்வித பேதமும் இன்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐக்கிய

06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# அலரி மாளிகை சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த சந்தேக நபர்கள்

## பொதுமக்களிடம் உதவி கோரியுள்ள பொலிஸார்





அலரி மாளிகைக்குள் பிரவேசித்து சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்கு பொதுமக்களின் உதவியை பொலிஸார் கோரியுள்ளனர். 2022.07.09 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் இந்த சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட வேண்டும் என கொழும்பு தெற்குப் பிரிவின் பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. சந்தேகநபர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் 0112 421 867, 0763 477 342, 1997 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கின்றது.

# கனியவள ஏற்றுமதியை துரிதப்படுத்த சுற்றாடல் துறை அமைச்சு நடவடிக்கை

### அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்

கனிய வளம் உள்ள இடங்களை அடையாளம் கண்டு, அவற்றை கைத்தொழில் பிரதேசங்களாக அறிவிப்பதற்கும், இத்துறையில் முதலிடுவோரை உள்வாங்க அவர்களுக்கு சலுகைகள் வழங்குவது தொடர்பில் அமைச்சு ஆராய்ந்து வருவதாக சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

எதிர்வரும் ஆண்டில், இந்தத் துறை சார்ந்த தொழில்களை வளர்த்தெடுக்கும் வகையில் இருநூறு கோடி முதலீடுகளை ஈர்ப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த ஆண்டுக்குள், கனிய வளங்கள் ஏற்றுமதிகளால் முன்னூறு மில்லியன் டொலர் வருமானம் பெறுவதை இலக்காகக் கொண்டு தனது அமைச்சு பணியாற்றுமெனவும் அமைச்சர் நஸீர் அஹமட் இதன்போது தெரிவித்தார்.

நில அகழ்வுத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராயும் கூட்டம் (18) சுற்றாடல் துறை அமைச்சர் நஸீர் அஹமட் தலைமையில் நடைபெற்றது.



அமைச்சி`ல் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க, மேலதிக செயலாளர் ரூபசிங்க, புவியியல் சேவை மற்றும் நில அகழ்வுப் பணியகத் தலைவர் செனரத் ஹேவகே மற்றும் பொறியியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சஜ் ஜியாடன சில்வா, புவியியல் சேவை மற்றும் நில அகழ்வுப் பணியகப் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான டாக்டர் சரத் ஒபேசேகர மற்றும் எம்.பெரோஸ் ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்கள் கந்து கொண்டனர்.

கனியவளங்கள் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராயப்பட்ட இக்கூட்டத்தில்,இதற்குத் தடையாக உள்ள நில அகழ்வுத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தேவைப்படும் அன்னியச் செலாவணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண, கனியவள ஏற்றுமதியை ஊக்குவிக்க உள்ள வழிகள் பற்றியும் ஆராய்வதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும்,அகழ்வுத் தொழில்களின் போது, சூழல் மாசடையாமல் இருப்பதற்கான பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தையும் அதிகாரிகளிடம் அமைச்சர் இதன்போது எடுத்துரைத்தார். இந்தத்துறையில் ஈடுபாடு கொண்ட சுமார் 57 முதலீட்டாளர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## நகர்வலம்

### இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின்;

# 1000ஆவது வேலைத்திட்டத்திற்கு எஸ்.ஆனந்தகுமார் வாழ்த்து

ஆயிரமாவது வேலைத் திட்டத்தை முன்னெடுக்கும் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார் வாழ்த்துத் தெரிவித்துள்ளதுடன், அமைப்பின் பணிகளை தொடர்ந்து சிறப்பாக முன்னெடுக்க தமது ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு தயாராக உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



மலையக அரசியல்வாதிகளால் கவனிப்பாரற்றுக்கிடக்கும் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் பல்வேறு உதவிகளை கடந்த சில வருடங்களாக இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பு முன்னெடுத்துவருவதாக அறிந்தேன்.

இவர்களது பணிகளை கண்டு ஆச்சரியப்படுவதுடன் சமூக மாற்றத்திற்கும் சமூக அபிவிருத்திக்கும் தேவையான பணிகளை இவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

அமைப்பின் இயக்கத்திற்கான நிதியானது புலம்பெயர் நாடுகளில் வாழும் மலையக சொந்தங்கள் குறிப்பாக மத்தியகிழக்கு நாடுகளில் பணிபுரியும் மலையக இளைஞர், யுவதிகளால் வழங்கப்பட்டு வருகிறது.

எவ்வித எதிர்பார்ப்புமின்றி மலையக சமூகத்திற்கான கலை, கலாசார மற்றும் சமூக ரீதியாக பணியாற்றிவரும் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் ஆயிரமாவது வேலைத்திட்டத்திற்கு வாழ்த்துகளை தெரிவிப்பதுடன், தொடர்ந்து அமைப்பின் வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதற்கு எம்மால் முடிந்த உதவிகளையும் வழங்குவோம் எனத் தெரிவித்துள்ளார்.

### சிரேஷ்ட ஊடகவியலாளர்

# கயிரிக பேருசிங்கவின் மாமியார் காலமானார்



மாதிவல தலவதுகொட, கோட்டை இல. 13/427 இல் வசித்து வந்த பிரபல சமூகசேவகி சரோஜனீ ராஜபக்ஷ விக்ரமசிங்க கடந்த 19 ந் திகதி காலமானார்.

பன்னல பிரதேச வர்த்தகர் டீ.பி. ராஜபக்ஷ மற்றும் ஏ.என்.ரணசிங்க ஆகியோரின் புதல்வியான இவர், விஜேவர்தன விக்ரமசிங்கவின் பாரியாராவார்.

இனக்ஸி பேருசிங்க மற்றும் லக்மினி விஜேசிங்கவின் தாயாரும் சிரேஷ்ட ஊடகவியலாளரும் சட்டத்தரணியுமான கயிரிக பேருசிங்க மற்றும் ஜயந்த விஜேசிங்க ஆகியோரின் மாமியும் செனிரு மற்றும் தெவிருவின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (21) மாலை தலவத்துகொட மயானத்தில் நடைபெற்றது.

# கால்வாயில் மூழ்கி பெண் உயிரிழப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

ராஜாங்கன நீர்த்தேக்கத்திற்கு அருகில் உள்ள கால்வாயில் குளிப்பதற்காக சென்ற பெண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ராஜாங்கன பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தபுத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கால்வாயில் குளிக்கச் சென்ற நீரில் மூழ்கிய பெண்ணொருவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக தபுத்தேகம வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

தபுத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




கொழும்பு சாஹிரா கல்லூரி, டி.எஸ் சேனாநாயக்க கல்லூரி, முஸ்லிம் மகளிர் கல்லூரிகளில் சேவையாற்றி ஓய்வு பெற்ற சிரேஷ்ட எழுத்தாளர் ஆசிரியை காலாபூசணம் ஸக்கியா சித்தீக் பரீட் எழுதிய 'நமது வரலாற்று ஆளுமைகள் எனும் முதலாவது பாகம்' நூல் வெளியீட்டு வைபவம் (20) கொழும்பு தபாலக கேட்போர் கூடத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர்என். எம். அமீன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். நூலின் முதற் பிரதியை மூஷான் பவுண்டேசன் தலைவா` அல்ஹாஜ் முஸ்லிம் சலாஹுதீன் பிரதம அதிதியிடமிருந்து பெற்றுக் கொண்டார். கௌரவ அதிதிகளாக முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், முஸ்லிம சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் இப்ராஹீம் அன்சார் உட்பட முக்கியஸ்தர்களும் கலந்து சிறப்பித்தனர். படங்கள்: அஷ்ரப் ஏ சமத்

# சுற்றிவளைப்பில் 30 பேர் கைது

**வெலிகம தினகரன் நிருபர்**

தென் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹணவின் பணிப்பின்பேரில் வெலிகம நகரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 30 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுள் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாகியிருந்த 12 பேரும் போக்குவரத்து விதிமுறைகளை மீறிய 13 சாரதிகளும் போதைப்பொருட்கள் வைத்திருந்த 5 பேருமாக சுமார் 30 பேர் கைது செய்யப்பட்டனர்.





யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு யாழ்.ராணி " புகையிரதத்தில் வந்திறங்கினார். அமைச்சர் அதிகாரிகள் சகிதம் புகையிரத நிலையத்தை பார்வையிடுவதையும் அருகில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உட்பட அரச அதிகாரிகளையும் படங்களில் காணலாம்.

எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும்:

## பெற்றோலியத்துறை , மின்சாரத்துறை மறுசீரமைப்பு செய்யும் வேலைத்திட்டம் தொடரும்

### அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எத்தகைய எதிர்ப்புகளை சந்திக்க நேர்ந்தாலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபை ஆகிய இரண்டையும் மறுசீரமைப்பு செய்யும் நடவடிக்கைகள் தொடரும் என மின் சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்கத்தினர் பெற்றோலிய கூட்டுத்தாபனம் மறுசீரமைப்புக்கு எதிராக இன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு தயாராகி வரும் நிலையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அனைத்து அரசியல் கட்சிகளுடனும் சம்பந்தப்பட்ட பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்க ஒன்றியத்தினர் பெற்றோலிய கூட்டுத்தாபன மறுசீரமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் உத்தேச மறுசீரமைப்புக்கு எதிராக அவர்கள் இன்றைய தினம் எதிர்ப்பு பேரணி ஒன்றையும் ஏற்பாடு செய்துள்ளனர்.

மேற்படி மறுசீரமைப்பு வேலைத் திட்டம் தொடர்பில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினாலும் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிற்சங்கத்தினரது எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமையை நாம் சவாலுக்கு உட்படுத்த விரும்பவில்லை. எனினும் பெற்றோலிய கூட்டத்தாபனம் மற்றும் மின்சார சபை ஆகியவற்றின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது உறுதி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## விவசாயத்தில் அதிக கவனம் செலுத்தி பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு

### அனுராதபுரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

பெரும்போகத்திற்குத் தேவையான உரங்களை எந்தத் தாமதமும் இன்றி விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வடமத்திய மாகாண பிரதம சங்கநாயக கலாநிதி பல்லேகம சிறினிவாச தேரருடன் சனிக்கிழமை (20) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜய ஸ்ரீ மஹா போதியை வழிபட்டு ஆசி பெற்றதோடு, வடமத்திய மாகாண பிரதம சங்கநாயக்க கலாநிதி பல்லேகம சிறினிவாச தேரரை சந்தித்து கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். அங்கு, மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ,



பொருளாதாரத்தை மீட்பதற்கு முக்கிய காரணியாக விவசாயத்தில் அதிக கவனம் செலுத்தி பொருளாதார பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்தார்.

தேயிலை, இறப்பர், தென்னை போன்ற பயிர்களுக்கு உரம் வழங்கும் பணியும் தற்போது நடைபெற்று வருகிறது.

மேலும், சோளப் பயிர்ச்செய்கையை ஊக்கப்படுத்தினால், கோழிப்பண்ணை கைத்தொழிலை தொடர முடியும். சோளத்திற்கான விதை பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய விரைவான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

தமது பிரதேசங்களில் விவசாயத்திற்கு தேவையான உரம், எரிபொருள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் உள்ளதா? என்பதைக் கண்டறியும் பொறுப்பை பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதோடு, மத வழிபாட்டுத்தளங்களின் மேம்பாடு குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுவருகிறது.

அதன் பிரகாரம், மகா விகாரையின் அகழ்வுப் பணிகள் தற்போது வேகமாக நடைபெற்று வருகின்றன.

அதன் மூலம் மியான்மார், தாய்லாந்து போன்ற பௌத்த நாடுகளிலிருந்து பெருமளவிலான மக்களை இந்நாட்டிற்கு எம்மால் அழைத்து வர முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## 16ம் மாடியிலிருந்து தவறி வீழ்ந்து ஒருவர் பலி

### கொள்ளுப்பிட்டியில் சம்பவம்



கொள்ளுப்பிட்டி – 19 ஆவது ஒழுங்கையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டிடத்தில் இருந்து தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார். சனிக்கிழமை இரவு (20) குறித்த நபர் இந்தக் கட்டிடத்தின் 16ஆவது மாடியில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொஸ்வத்த – பதுரஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கட்டுமானத்தில் உள்ள கட்டடத்தின் 16வது மாடியில் வேலை செய்து கொண்டிருந்த அவர், சில தேவைக்காக தரை தளத்திற்கு செல்ல முயன்ற போது தவறி விழுந்ததாக கூறப்படுகிறது. நீதவான் விசாரணைகள் நடத்தப்பட்டு சடலம் பிரேத பரிசோதனைக்காக

06

கூட்டு அரசாங்கத்தில் அனைவரும்:

## ஒன்றிணைந்து செயற்படக்கூடிய இருதரப்பு நம்பிக்கை அவசியம்

### பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கூட்டு அரசாங்கத்தில் இணைந்து செயலாற்றுவதானால் நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் இணக்கப்பாடு காணும் விடயங்கள் இணக்கப்பாட்டுக்கு வர முடியாத விடயங்களை விட அதிகமாக இருக்க வேண்டியது அவசியம் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கூட்டு அரசாங்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் உருவாகக்கூடியது. கூட்டு அரசாங்கத்திற்கான சவால் நமது நாட்டில் மட்டுமன்றி ஏனைய நாடுகளிலும் உருவாகின்றது என்பதை சுட்டிக்காட்டி யுள்ள பிரதமர், கூட்டு அரசாங்கம் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.



ஒன்றிணைந்து செயற்படக்கூடிய அந்நியோன்ய நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பு இதற்கு அவசியமாகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் ஒன்றிணைந்து வெற்றி பெற்ற நாம் அனைவரும் அதன் மேலும் ஒரு படியாக நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பாரிய சவால்களை எதிர்கொண்டு முன்னோக்கி பயணிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட

06

தூர நோக்குடன் செயற்படும் தலைவரான

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்

### மிஹிந்தலை ரஜமஹா விஹாராதிபதி தேரர் தெரிவிப்பு




தூர நோக்குடன் செயற்படும் தலைவர் என்ற வகையில் இந்த நாட்டின் பொறுப்பை ஏற்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , நிச்சயம் நாட்டைக் கட்டியெழுப்புவார் என மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி கலாநிதி வண. வலவாஹெங்குனவெவே தம்மரதன நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

“ஒரு விடயம் நடக்க வேண்டுமாயின் தகுதியானவர்களுக்கே அது வழங்கப்பட வேண்டும்” என்ற வார்த்தைகளை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள், இன்று இந்நாட்டின் காவலராக மாறி நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை சுமந்து வருவதாகக் குறிப்பிட்டார்.

மிஹிந்தலை புனிதத் தலத்துக்கு நேற்று (21) விஜயம் செய்த ஜனாதிபதி அவர்கள் சமய வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார். மேலும் விகாராதிபதி கலாநிதி

வண. வலவாஹெங்குனவெவே தம்மரதன நாயக்க தேரரை சந்தித்து நலம் விசாரித்த போதே தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கியதுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு " மிஹிந்தலா நினைவுச் சின்னமும்" வழங்கி வைக்கப்பட்டது .

மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில்,

“தர்மாசோக மன்னரின் மூத்த மகனாகிய

06

## யாழ். பலாலி விமான நிலையம் ஊடாக இந்திய யாத்திரிகர்கள்

### வசதி வாய்ப்புகளை ஏற்படுத்த அமைச்சர் ஹரீன் திட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த வருடத்தில் 10 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவர் என நம்புவதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார் .

இந்தியாவிலிருந்து பெருமளவு உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர், இந்திய உல்லாசப் பிரியாணிகளுக்



காக அதிக வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ்.பலாலி விமான நிலையத்தின் மூலம் இந்திய யாத்திரிகர்கள் இலங்கைக்கு வருவதற்கான

06

பொதுமக்களின் நலன், வசதி கருதி

## பஸ்களுக்கான புதிய முற்கொடுப்பனவு அட்டை

### புதிய முறையை அறிமுகப்படுத்திய அமைச்சர்

பொதுமக்களின் நலன் கருதி பஸ்களுக்கான புதிய முற்கொடுப்பனவு அட்டை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், “தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் காலி வரை பயணிக்கும் பஸ்களுக்காக,

06



தொழில் நிமித்தம் கம்பஹாவுக்கு சென்ற

## மலையக சிறுமி நீச்சல் தடாகத்தில் சடலமாக மீட்பு

**மஸ்கெலியா நிருபர்**

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிலுள்ள மொக்கா தோட்ட கீழ் பிரிவில் இளம் யுவதியொருவர் நீச்சல் தடாகத்தில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

17 வயது உடைய ரமணி என்ற இளம் யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். கடந்த சனிக்கிழமை இரவு (20) கையடக்க தொலைபேசியில்



பேசிய வண்ணம் அவர் பணிபுரிந்த வீட்டில் உள்ள நீச்சல் தடாகத்தில் விழுந்து மரணம் அடைந்துள்ளதாக, ரமணியின்

06

சுமார் இரண்டு மாதங்களின் பின்னர்

## சபுகஸ்கந்தவில் எண்ணெய் சுத்திகரிப்பு மீள ஆரம்பம்!

### பொருளாதார மசகு எண்ணெய் நாட்டுக்கு வருகிறது

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் சுமார் இரண்டு மாதங்களின் பின்னர் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதற்காக ஒரு லட்சம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தமது ட்விட்டர் கணக்கில்

06



## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன் THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 06ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 24

### குறள் தரும் சிந்தனை



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதலாக இருப்பது போல உலகத்திலுள்ள எல்லாவற்றிற்கும் இறைவன் முதலாக இருக்கிறான்.

## கொவிட் 19 அச்சுறுத்தலில் இருந்து சிறுவர்களை பாதுகாப்போம்

உலகிற்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் கொவிட் 19 தொற்றுக்கு இந்நாட்டில் உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கையில் மீண்டும் அதிகரிப்பு ஏற்பட்டு வருகின்றது. இதனை சுகாதார அமைச்சின் தரவுகளும் உறுதிப்படுத்திக் கொண்டிருகின்றன. அந்த வகையில் இத்தொற்றுக்கு உள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கையிலும் தற்போது அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக சிறுவர் நோயியல் மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோயியல் விஷேட மருத்துவ நிபுணர் டொக்டர் கோசல கருணாரட்ன குறிப்பிடுகையில், 'கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெற வேண்டிய நிலைக்கு உள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக கடந்த ஜுன் மாதம் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக மூவர் தான் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றனர். ஆனால் இத்தொகை ஜுலை மாதம் நிறைவடையும் போது 24 வரை அதிகரித்துள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டில் கடந்த ஜுலை மாதத்தின் நடுப்பகுதியின் பின்னர் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட ஆரம்பித்திருக்கின்றது. இதனை தொற்று நோயியல் தடுப்பு பிரிவின் தரவுகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

அதேநேரம், தற்போது இத்தொற்றுக்கு உள்ளாகின்றவர்களுக்கு அதன் தாக்கமும் பாதிப்புகளும் முன்பு போலன்றி பலவீனமடைந்திருப்பதை பரவலாக அவதானிக்க முடிகின்றது. அதாவது கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைப் பலவீனப்படுத்தக்கூடிய தடுப்பூசி பாவனைக்கு வர முன்னர் இருந்த அச்சுறுத்தலும் தாக்கமும் தற்போது இல்லை என்பதே அனேகரின் அபிப்பிராயமாகும். அது உண்மைதான். ஆன போதிலும் இத்தடுப்பூசியைப் பெற்றிருந்தாலும் இத்தொற்று ஏற்பட முடியும். அதனால் அத்தொற்றைத் தவிர்த்துக் கொள்வதைக் கருத்தில் கொண்டு செயற்பாடுகளை அமைத்துக் கொள்வது அவசியம். குறிப்பாக இத்தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார பழக்க வழக்கங்களை முழுமையாகக் கடைபிடிக்கத் தவறலாகாது.

அதேவேளை, நாட்டின் சனத்தொகையில் ஒரு கோடியே 71 இலட்சத்து 8 ஆயிரத்து 834 பேர் தான் இத்தடுப்பூசியின் முதலாவது டோஸையும், ஒரு கோடியே 45 இலட்சத்து 65 ஆயிரத்து 905 பேர் இரண்டாவது டோஸையும், 80 இலட்சத்து 74 ஆயிரத்து 735 பேர் பூஸ்டர் டோஸையும், ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 462 பேர் நாலாவது டோஸையும் என்றபடி இத்தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

இது இத்தடுப்பூசி பெற்றுக்கொடுக்கப்பட முன்னர் காணப்பட்ட இத்தொற்றின் அச்சுறுத்தலும் தாக்கங்களும் பெரிதும் வீழச்சியடையக் காரணமாக அமைந்திருக்கின்றன. ஆனாலும் இத்தொற்றுக்கு உள்ளாவதைத் தவிர்த்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏனெனில் இதன் தாக்கமும் பாதிப்பும் அச்சுறுத்தலாக அமையக்கூடிய நிலைமை தொடர்ந்தும் காணப்படுவதோடு, இத்தடுப்பூசியின் ஒரு டோஸைக் கூட பெற்றுக் கொள்ளாதவர்களாக குறிப்பிடத்தக்களவானோர் சமூகத்தில் இருப்பதையும் மறந்துவிட முடியாதுள்ளது. அதிலும் குறிப்பாக 12 வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கு இத்தடுப்பூசி இன்னும் பெற்றுக்கொடுக்கப்படவுமில்லை.

இருந்த போதிலும் இத்தொற்று தொடர்பில் மக்கள் மத்தியில் அசிரத்தையும் கவனயீனமும் தற்போது அதிகரித்த நிலையிலேயே காணப்படுகிறது. அது இத்தொற்றின் பரவுதலுக்கு பெரிதும் உதவக்கூடியனவாக உள்ளன. இத்தொற்று மீண்டும் தலைதூக்கும் நிலையை அடைந்திருப்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டாகும்.

இந்தப் பின்புலத்தில் தான் தற்போதைய சூழலில் காய்ச்சலுக்கு உள்ளாகும் பிள்ளைகளுக்கு இரண்டாவது நாளில் கடும் காய்ச்சல் ஏற்படுமாயின் தாமதியாது தகுதியான மருத்துவர் ஒருவரிடம் மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக் கொள்வதோடு இப் பிள்ளைகளுக்கு ரபிட் அன்டிஜன் அல்லது டெங்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளுமாறும் சிறுவர் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் இந்நாட்டில் கொவிட் 19 தொற்று மாத்திரமல்லாமல் டெங்கு காய்ச்சலும் காணப்படவே செய்கின்றது. அதனால் இத்தொற்றுக்கு உள்ளாவதையும் அதன் பரவுதலுக்கு துணை போவதையும் தவிர்த்துக் கொள்வதுடன் இளம் பராயத்தினரின் ஆரோக்கிய நலன்களுக்கு பாதுகாப்பு அளிப்பதையும் கருத்தில் கொண்டு செயற்படுவது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். அது தம் குடும்பத்துக்கும் சமூகத்திற்கும் மாத்திரமல்லாமல் நாட்டுக்கும் ஆற்றும் பாரிய சேவையாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# பாதுகாப்புத்துறை பேச்சாளர்களும் ஊடகவியலாளர்களும் ஒன்றுபட்டு புரிந்துணர்வுடன் செயல்பட வேண்டும்

பாதுகாப்புச் செயலாளர்

ஸாதிக் ஷிஹான்

## 'ஊடகங்கள் சரியாக பயன்படுத்தப்பட்டதனாலேயே நான்காவது ஈழ யுத்தம் வெற்றி கொள்ள முடிந்தது'



சர்வதேச அளவில் நாட்டை இழிவுபடுத்தும் செய்திகள் பரப்பப்படுவதைத் தடுப்பதற்கு தேசிய பாதுகாப்பிற்கு பொறுப்பானவர்கள் ஊடகங்களுடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டும் என தெரிவித்துள்ள பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, ஊடகவியலாளர்களுடனான தனது நெருங்கிய தொடர்பு, இது போன்ற செய்திகள் கடந்த காலங்களில் வெளியாவதைத் தவிர்க்க உதவியது என்றும் குறிப்பிட்டார்.

பாதுகாப்புத் துறை மற்றும் பொலிஸ் பேச்சாளர்கள் ஊடகவியலாளர்களுடன் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில் மிகவும் அன்னியோன்னியத்துடன் செயல்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

வெகுஜன ஊடக அமைச்சும், அரசாங்க தகவல் திணைக்களமும் இணைந்து 'தேசிய பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஊடக அறிக்கையிடல்' என்ற தொனிப்பொருளில் நடத்திய கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு கூறினார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சரான கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பாதுகாப்புச் செயலாளர் மேலும் உரையாற்றுகையில், 'நாட்டின் தேசிய பாதுகாப்பையும் நாட்டின் நற்பெயரையும் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு ஊடகங்களுக்கு உள்ளன. அதனால் அவர்களுடன் ஒன்றிணைந்து செயல்படுவது அவசியம்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் நாட்டின் நலனை கருத்தில் கொண்டு பாதுகாப்பு துறை, நீதித்துறை மற்றும் ஊடகத்துறை ஆகியன ஒன்றிணைந்து பயணிப்பதும் காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

நான்காவது ஈழ யுத்தத்தின் போது ஊடகங்களுடன் சரியான முறையில் உறைவை பேணியதாலும் அந்த ஊடகங்களை சரியாகப் பயன்படுத்தியமையினாலுமே இந்த யுத்தத்தை வெற்றி கொள்ள முடிந்தது.

ஆனால், கடந்த மே 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களின் போது, ஊடகங்கள் அறிக்கை இட்ட முறைமை சரியானவையா? அல்லது பிழையானவையா? என்பது தொடர்பில் தமது மனதில் கை வைத்து கேட்க வேண்டும்.

வளர்ந்து வரும் எதிர்கால சந்ததியினருக்கு ஊடகங்கள் ஊடாக வன்முறைகளைக் காண்பிப்பது பொருத்தமானவையா? என்பது குறித்தும் நாங்கள் சிந்திக்க வேண்டும்.

எது எவ்வாறாக இருந்தாலும் ஒரு பிரச்சினையைத் தீர்க்க வன்முறையை அல்லது காட்டு தர்பாரை பயன்படுத்த ஒரு போதும் அனுமதிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட பங்குகொண்ட இக்கருத்தரங்கில், அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க, ஸ்ரீபாலி பீடத்தின் பேராசிரியர் சிரேஷ்ட சட்டத்தரணி பிரதீபா மஹனாம, தென்பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹன ஆகியோரும் விஷேட விரிவுரைகளை நிகழ்த்தினர்.

இராணுவப் பேச்சாளர் பிகேடியர் நிலந்த பிரேமரட்ன, பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கேர்னல் நளின் ஹேரத், கடற்படை பேச்சாளர் கெப்டன் இந்திக சில்வா, விமானப்படை பேச்சாளர் குரூப் கெப்டன் துஷான் விஜேசிங்க, பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பேச்சாளர் அனுர திசாநாயக்க ஆகியோரும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

# நல்லவர்கள் கண்டுகொள்ள வேண்டிய நல்லகண்ணு!

## தகையால் தமிழர் விருது

தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசால் தகைசால் தமிழர் விருது வழங்கப்பட்டு வருகிறது. 2022 ஆம் ஆண்டு விருதாளராக சிறந்த, தன்னலமற்ற, அரசியல்வாதியாக, சமவுடமை கொள்கையாளராகவும் பணியாற்றி, தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும்பங்களிப்பை அளித்த தமிழருமான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு அவர்களுக்கு கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்திய பொதுவுடமை இயக்க வரலாற்றில் நல்லகண்ணு தனித்துவமானவர். இளம் வயதிலேயே சுதந்திர போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி கொண்டதில் ஆரம்பித்து இன்றுவரை சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஒடுக்கப்பட்ட மக்களின் உற்ற தோழனாக விளங்குகிறார்.

பணம், பதவி, சலுகைகளை எப்போதுமே துச்சமென கருதும் இவர் பொதுவாழ்வில் நேர்மை தவறாத எளிமையான வாழ்க்கையை கடைபிடிப்பதால் எவராலும் எட்டமுடியாத இடத்தில் இருக்கிறார்.

சுதந்திர போராட்ட தியாகிகள் என்ற அடிப்படையில் அரசு வழங்கும் ஓய்வூதிய திட்டத்தை பொறுத்தவரையில் நாட்டின் விடுதலைக்காக கடமையை செய்தேன். அதற்கென தனக்கு வெகுமதி வேண்டாமென மறுத்த



கர்ம வீரர் நல்லகண்ணு. அவரது முதுமை வாழ்க்கையின் பயன்பாட்டுக்காக இடதுசாரி இயக்கத்தினர் சேர்த்து கொடுத்த ஒரு கோடி ரூபாய் அன்பளிப்பை கட்சியிடமே திரும்ப ஒப்படைத்த வள்ளல். தகைசால் தமிழர் விருதோடு தமிழ்நாடு அரசு வழங்கிய பந்து இலட்சம் பணப் பரிசையும் விழா மேடையிலேயே முதல்வர் நிவாரண நிதியத்திற்கே பயன்படுத்திக் கொள்ளுங்கள் என மு.க ஸ்டாலினிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார்.

நல்லகண்ணு போன்றவர்களுக்கு கிடைக்கின்ற விருதுகள் நேர்மைக்கும் தூய்மைக்கும் அளிக்கப்படுகின்ற உயரிய அங்கீகாரமாகும். இதனால் விருதுகளும் பெருமை படுத்துகின்றன.

ஆருயிர் அண்ணன் தர்மாவின் ஏற்பாட்டில் இடதுசாரி தலைவரும் ஈழத்தமிழர் ஆதரவாளருமான சி.மகேந்திரனின் ஏற்பாட்டிலேயே நல்லகண்ணு அய்யாவை அவரது இல்லத்தில் சந்தித்தேன். ஈழத்தமிழர் உரிமைகள், மலையக மக்களின் நலன்கள் சார்ந்த பல்வேறு விடயங்களைப் பற்றியும் பேசினோம். அரசியல் சமூக செயற்பாடுகளில் உன்னிப்பான நினைவாற்றலுடன் இலங்கையின் தற்போதைய சூழலுக்கேற்ப சிறுபான்மை சமூகங்களின் தலைவர்கள் தமிழகத்திலும், மத்தியிலும் முன்னெடுக்க வேண்டிய ஆக்கபூர்வமான செயற்பாடுகளை வலியுறுத்தும் அவரது சிந்தனைகள் ஆழமானவை (இன்னொரு பதிவில் தனியாக எழுதுகிறேன்).

நல்லகண்ணு அய்யா (96) தள்ளாத வயதிலும் துள்ளும் இளமை சிந்தனைகளால் இலங்கைத் தமிழர் ஆதரவாளர்களை திரட்டி மீண்டும் அறப்போர் புரியும் மன வலிமையிலிருப்பது வியப்பளிக்கிறது. ஒப்பற்ற இந்த மாமனிதர் நீடூழிவாழ வணங்குகிறேன்.



சதீஷ்குமார் சிவலிங்கம்,
சிரேஷ்ட உப தலைவர் ,
மலையக மக்கள் முன்னணி
இலங்கை.

# தமிழக முதலமைச்சர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பிரதிநிதிகள் சந்திப்பு

## லீக்கின் பவள விழாவில் பங்கேற்க அழைப்பு



தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுடன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தலைமையிலான குழுவினர் கடந்த சனியன்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தலைமையில் மாநில முதன்மைத் துணைத் தலைவரும் தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவருமான எம். அப்துல் ரஹ்மான், மாநில துணைத்தலைவரும் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினருமான கே. நவாஸ்கனி, ஊடகவியலாளர் திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

கேரள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் செய்யது சாதிக் அலி ஷிஹாப் தங்களின் தேசிய அளவிலான சமய நல்லிணக்கப் பயணமாக 'தேச நேச திருப்பயணம்' (journey of harmony India) மேற்கொண்டு கேரளா, கர்நாடக மாநிலங்களில் பயணத்தை நிறைவு செய்து தமிழ்நாட்டுக்கு வருகை தருகிறார். இவர் தலைமையில் எதிர்வரும் செப்டம்பர் 2 ஆம் திகதி மத நல்லிணக்க கூட்டம் சென்னை ராயபுரம் ரம்ஜான் மஹாலில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் பங்கேற்று வாழ்த்துரை வழங்க அழைப்பு விடுக்கும் நோக்கில் தமிழக முதலமைச்சர் ஸ்டாலினுடன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் தலைமையில் இச்சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பு மிகவும் சினேகபூர்வமாக அமைந்திருந்ததோடு அழைப்பையும் முதலமைச்சர் மிகுந்த ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்டார்.

இவ்விழாவுக்கு வாழ்த்துரை வழங்க அழைப்பு விடுத்த தமிழ்நாடு முஸ்லீம் லீக் தலைவர் தலைமையிலான குழுவினருக்கு நன்றி தெரிவித்த முதலமைச்சர் ஸ்டாலின், தாம் அதே தினத்தில் தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள திருவனந்தபுரம் செல்லவிருப்பதாகவும் இவ்விழாவுக்கு தமிழகத்தின் இரண்டு அமைச்சர்களை உத்தியோகபூர்வமாக அனுப்பி வைப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.



இதேவேளை, இச்சந்திப்பின் போதே முஸ்லீம் லீக் தலைவர் தலைமையிலான பிரதிநிதிகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் 75வது நிறுவன ஆண்டு தின பவள விழா எதிர்வரும் 2023 மார்ச் 10 ஆம் திகதி சென்னையில் நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில் பல்சமய சான்றோர் பெருமக்களுக்கு சமய நல்லிணக்க விருதுகள் வழங்கி வாழ்த்துரை வழங்க விடுக்கப்பட்ட அழைப்பினை முதலமைச்சர் ஸ்டாலின் அன்புடன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

மேலும் சமுதாயம் சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்கள் குறித்து முஸ்லீம் லீக் பிரதிநிதிகள் முதலமைச்சருடன் இச்சந்திப்பின் போது கருத்து பரிமாறல்களையும் மேற்கொண்டனர். அனைத்து விடயங்கள் குறித்தும் மிகுந்த அக்கறையோடு கேட்டறிந்த முதல்வர், இங்கு முன்வைக்கப்பட்டுள்ள எல்லாக் கோரிக்கைகளையும் பரிசீலனை செய்வதாகவும் உறுதியளித்துள்ளார் என்று பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

# வரலாற்று புகழ்மிகு தில்லை மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த உற்சவம்

**'பண்டூரு முகிற் குலங்கள் எமதிறைவா மருகர் திருப்பதியிதென்ன**
**விண்டூர மழை பொழியுஞ் சிறப்பதனால் வளம் மலிந்து மிகுந்து தோன்றும்**
**மண்டூரில் உறை முருகன் மலரடிக்கோர் திருப்பதிகம் மரபிற் சொற்றான்**
**கண்டுமினிய மொழிப் பெரியதம்பிப் பிள்ளை எனும் கலைவல்லோனே'**

எனும் பாடலானது வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாற் பாடப் பெற்றது இப்பாடலிலே அனைத்து வரிகளும் மண்டூர் பதியின் சிறப்பை செப்பி நிற்கின்றன. மண்டூர் கவிஞர் பெருமானாகிய புலவர்மணிப்பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் 1922ஆம் ஆண்டில் வெளியீடு செய்த மண்டூர்ப்பதிகம் எனும் கவிதை சிறப்புப் பெற்று விளங்குகின்றன. இவற்றினை பண்டிதர் வி.சி. கந்தையா அவர்கள் தமது சைவக்கோயில் எனும் நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு வாவியின் தெற்குப்புறத்தே வாவிக்கரையோரமாக அமைந்துள்ள ஒரு பாரம்பரிய விவசாயக்கிராமம் மண்டூராகும். இங்கு அமைந்திருக்கின்ற முருகன் ஆலயம் ' சின்னக்கதிர்காமம்' என்று சிறப்பு பெற்றது கிழக்கிலங்கையின் திருப்படைக் கோயில்களில் அல்லது தேசத்துக் கோயில்களில் ஒன்றாகும். இந்த ஆலயம் பண்டைய மன்னர்களின் மதிப்பும் மானியங்களும் நிருவாக அமைப்பும் பெற்றதாகக் கொள்ளப்படுகின்றது. முற்காலத்தில் வகுக்கப்பட்ட நிருவாக அமைப்பும் பழைய வழிபாட்டு பூசை மரபுகளும் இன்றுவரை மாற்றமின்றி பேணப்பட்டு கட்டிக் காத்து வருவதே இவ்வாலயத்தின் சிறப்புமிக்க தொன்றாக காணப்படுகின்றன.

**ஆலய வரலாறு**

முருகன் சூரனை கொல்ல விட்ட வேலானது வாகூர மலையைப் பிழந்து மூன்று குளம், கல்லிக் கடலில் வீழ்ந்த போது எழுந்த தீப் பொறிகளில்ஒன்றுஉகந்தமலையுச்சியிலும், மற்றயவை வெள்ளை நாவற்பதி (திருக் கோவிலிலும்) மற்றைய தீப்பொறி தில்லை மரத்தில் தங்கியதாக ஐதீகக் கதை எடுத்துக் காட்டுகின்றது. மண்டூரில் இவ்வாறு இடம் பெற்ற வேலாயுதமானது மரத்தில் தங்கியிருந்த போது அப்பகுதியில் வாழ்ந்த வேடர்கள் அதனைக் பாதுகாத்து போற்றி மன பக்தியோடு பூசை செய்து வழிபட்டு வரலாயினர் இதன் பின்னர் மட்டக்களப்பு வாவியில் மீன்பிடிப்பதற்கு வந்து இளைப்பாறுவதற்கு கரை சேர்ந்த போது துறைநீலாவனைச் சீர்பாதகுலத்தார் சிலரும் அவ்வேடருடன் சேர்ந்து வழிபட்டு சிறப்பித்துள்ளனர் என்று கர்ண பரம்பரைக் கதையில் இருந்து அறியக்கிடைக்கின்றன.

மட்டக்களப்பின் கிழக்குப் பகுதியிலே முக்குவ வன்னிமைகள் சிற்றரசர்களாக இருந்தனர் என்று சரித்திரக்கூற்று எடுத்துக்காட்டுகின்றது. அன்னாருடைய அங்கீகாரமும் அதிகாரமும் பெற்றுக் கொள்ளுதல் பொதுத் தலங்களுக்கெல்லாம் நிதியும் சிறப்புமாக இருந்தமையால் அதன்படி தேசத்தலைவனான முக்குவ வன்னிமையின் தலைமையில் கோவில் அமைப்பும் நிருவாக ஒழுங்குகளும் வகுக்கப்பெற்றன. அன்னாரால் பல மானியங்களும் கோவில் பரிபாலனத்திற்காக வழங்கப் பெற்றிருந்தன. எனவே வன்னிமையின் திட்டத்தின்படி கவுத்தன் குடி வேளாளர் குலத்தினர் கோயில் பரிபாலனத்திற்காக கோரக்களப்பில் இருந்து குடியமர்த்தி வண்ணக்கர் பதவியினையும், சுவாமி தூக்குதல் போன்ற



பொறுப்புகளை வழங்கி நடைமுறைப்படுத்தியிருந்தனர்.

தில்லை மண்டூர் முருகன் அருள் வளத்தினால் நில வளமும்; மற்றும் பொருள் வளமும் கோயிலில் அதிகமாக கிடைக்கப்பெற்றதாலே ஆலய சொத்துக்களின் வரவு செலவுகளை ஒழுங்குபடுத்துவதற்கு முக்கியமல்லாத செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்குமாக நான்கு கணக்குப் பிள்ளைகளை நியமனம் பெறும் ஒழுங்கும் தேசத்து வன்னிமைகளால் திட்டமிடப்பட்டது. இக்கோயிலின் அயற்கிராமங்களும் அக்கோவில் வழிபாட்டில் மிகுந்த

கலாநிதி, கலைச்சுடர்,சாமஸ்ரீ,
கீர்த்திஸ்ரீ, இலக்கிய வித்தகர்
நாராயணபிள்ளை நாகேந்திரன் (JP)...
ஓய்வு நிலைஅதிபர், களுவாஞ்சிகுடி

ஈடுபாடு கொண்டிருந்தோர் வாழ்பதிகளுமான துறைநீலாவனை குருமன்வெளி கோட்டைக் கல்லாறு , பெரியகல்லாறு என்னும் நான்கு கிராமங்களிருந்துமே இவர்களின் நியமனம் இடம்பெற்றிருந்தன.மற்றும் பெரிய கப்புகன் உரித்து சீர்பாதர் குலத்தில் ஒரு குடியான சிந்தாத்திர குடியினருக்கும் பூசைக் கப்புகன் உரித்து சிங்களக் குடியினருக்கும் கவுடாக்காரன், கங்காணி பதவிகளும், தரை கூட்டுதல், கழுவுதல், பொருட்களை கழுவுதல், சந்தனம் அரைத்தல்,நெல்குற்றல், மா இடித்தல், அமுது செய்தல் என உள் வெளிப் பணிகளும் கோயிலர்ருக்கும் என்று வலுவான திட்டம் செய்யப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கவையாகும்.

**ஆலயத்தின் அமைவிடம்**

மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலயாமனது காதிர் காமத்தை போன்றதாகவே தெற்கு புறத்தே வாசலைக் கொண்டு பழமை மாறாது மட ஆலயமாகவே எழிதான முறையில் அமைந்துள்ளதுடன் உள்ளே பிள்ளையார் ஆலயமும், நாகதம்பிராண் ஆலயம் ஏனைய பரிபால மூர்த்திகளுக்குரிய ஆலயம் அமைந்துள்ளதுடன் வாசல் முன்பாக கொத்து பந்தல் அமைத்து அழகு படுத்தும் காட்சிகளும் வெளி வீதியில் தெய்வாணை அம்மன் ஆலயமும், வள்ளியம்மன் ஆலயமும் அமையப் பெற்றுள்ளதுடன் அன்னதான மடங்களும் சிறப்பாக அமையப் பெற்றுள்ளன.

**ஆலய பூசை முறைகள்.**

இவ்வாலயத்தில் பூசைமுறையானது கதிர்காமத்தை போலவே மௌன பூசை இடம்பெறுகின்றது கதிர்காமத்தில் 'கப்புறாளை' அவர்கள் மேற்கொள்ள மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் 'கப்புகனார்' அவர்களால் வாய்க்கு துணி கட்டி மூல மூர்த்தியின் திரை திறக்கப்படமால் பூசைகள் நடைபெறுகின்றன. கதிர்காமத்தை போன்ற சகல விடையங்களும் அமையப்பெற்றுள்ளதால் இவ்வாலயத்தை சின்னக்கதிர்காமம் என்றே குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய சிறப்புமிக்க மண்டூர் முருகன் ஆலயத்தின் உற்சவம் கதிர்காமத் தீர்த்தோற்சவம் முடிந்து பத்தாம் நாள் அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 21ஆம்; நாள் ஆவணி மாத பூரணைத் தினத்தில் தீர்த்த நாளாகக் கொண்டு உற்சவ திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இந்த வகையில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழாக்கள் ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாட்கள் நடைபெற்று 10.08.2022 ஆம் திகதியன்று தீர்த்தோற்சவம் இடம் பெறவுள்ளன. எனவே இத்தகைய மகிமை பொருந்திய தில்லை மண்டூர் முருகன் ஆலயத்தின் உற்சவ காலங்களில் அடியார்கள் வருகை தந்து நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி அவனருள் பெறுக.

சைவ மஞ்சரி

## மானுடவியல்
(தொடர்)

### கழறிற்றறிவார் நாயனார்



85

இங்கனம் நிகழும் நாளில் மலைநாட்டையாட்சி புரிந்த செங்கொற்பொறையான் என்ற சேரவேந்தன் தனது அரச பதவியினைத் துறந்து தவஞ்செய்தற் பொருட்டுக் கானகஞ் சென்றான்.

இந்நிலையில் அரசியல் நூல் நெறியில் வல்ல அமைச்சர்கள் சேர நாட்டின் அரசியல் நலங்குறித்துச் சிலநாள் ஆராய்ந்தனர்.

பண்டைச் சேர மன்னர் மேற்கொண்டொழுகிய பழைய முறைமைப்படி அந்நாட்டின் ஆட்சியுரிமை திருவஞ்சைக்களத்திலே திருத்தொண்டு புரிந்துவரும் சேரர்குலத் தோன்றலாகிய பெருமாக்கோதையாருக்கே உரியதெனக் கண்டனர்.

திருவஞ்சைக்களத்தை அடைந்து பெருமாக்கோதையாரை வணங்கி இச்சேரநாட்டின் ஆட்சியுரிமை தங்களுக்குரியதாதலால் தாங்களே இந்நாட்டினைக் காக்கும் ஆட்சி புரிந்தருளுதல் வேண்டும்' என வேண்டினர்.

பெருமாக்கோதையார் 'மென்மேலும் பெருகும் இன்பமயமாகிய சிவதொண்டுக்கு இடையூறான ஆட்சியுரிமையை ஏற்றுக்கொள்ளும்படி இவ்வமைச்சர்கள் என்னை வற்புறுத்துகின்றார்கள். 'இச்சிவதொண்டிற்குச் சிறிதும் தடை நேராதபடி அடியேன் இந்நாட்டை ஆட்சிபுரிய இறைவனது திருவருள் துணைபுரிவதானால் அப்பெருமானது திருவுள்ளக் கருத்தையுணர்ந்து நடப்பேன்' எனத் தமதுள்ளத்தில் எண்ணிக்கொண்டு திருவஞ்சைக்களத் திருக்கோயிலிற் புகுந்து இறைவன் திருமுன்னர் பணிந்து நின்றார்.

**(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்





புத்தளம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னை நாதஸ்சுவாமி ஆலயத்தின் மஹோற்சவம் (14.08.20222) ஆலய பிரதம குருவும் தர்மகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ எஸ்.பந்தமநாபக் குருக்கள் தலைமையில்அண்மையில் இடம் பெற்றது. உடப்பு குறூப் நிருபர்

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

(19232) மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வழிபட்டால் என்ன பலன் கிடைக்கும்?

**சகல சௌபாக்கியமும் கிடைக்கும். காரிய சித்தி தருவார்.**

(19233) குங்குமத்தால் பிள்ளையார் பிடித்து வழிபட்டால் என்ன பலன் கிடைக்கும்?

**செவ்வாய் தோஷம் அகலும். குழந்தைகளைப் படிப்பில் வல்லவராக்குவார்.**

(19234) புற்று மண்ணினால் பிள்ளையார் செய்து வழிபட்டால் என்ன பலன் கிடைக்கும்?

**நோய்கள் அகலும். விவசாயம் செழிக்கும்.**

(19235) வெல்லத்தில் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் என்ன நடக்கும்?

**உடலில் உள்ளேயும், வெளியேயும் உள்ள கட்டிகள்(கொப்பளம்) கரையும். வளம் தருவார்.**

(19236) உப்பினால் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் என்ன நடக்கும்?

**எதிரிகளின் தொல்லை நீங்கும். எதிரிகளை விரட்டுவார்.**

(19237) வெள்ளெருக்கில் பிள்ளையார் செய்து வணங்கினால் என்ன நடக்கும்?

**பில்லி, சூனியம் விலகும். செல்வம் உயரச் செய்வார்.**

(19238) விபூதியால் விநாயகர் பிடித்து வழிப்பட்டால் என்ன நடக்கும்? **உஷ்ண நோய்கள் நீங்கும்.**

(19239) சந்தனத்தால் விநாயகர் பிடித்து வழிப்பட்டால் என்ன நடக்கும்? **புத்திர பேறு கிடைக்கும்.**

(19240) சாணத்தால் பிள்ளையார் பிடித்து வழிப்பட்டால் என்ன நடக்கும்?

**சகல தோஷமும் விலகி, வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெற வழி வகுக்கும்.**

(19241) வாழைப் பழத்தில் விநாயகர் பிடித்து வழிப்பட்டால் என்ன நடக்கும்? **வம்ச விருத்தி உண்டாகும்.**

(19242) வெண்ணெய்யில் விநாயகர பிடித்து வழிப்பட்டால் என்ன நடக்கும்? **கடன் தொல்லை நீங்கும்.**

(19243) சர்க்கரையில் விநாயகர் பிடித்து வழிப்பட்டால் என்ன நடக்கும்?**சர்க்கரை நோயின் வீரியம் குறையும்.**

(19244) பசுஞ்சாண விநாயகர் பிடித்து வழிப்பட்டால் என்ன நடக்கும்? **நோய்களை நீக்குவார்**

## "யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 3



இதனால் இவை கடவுள் துணிக்கைகள் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆற்றலின் மூலமும், இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றமும் இந்திய தத்துவ ஞானத்தால் " நாதம்" என்று அழைக்கப்படுகிறது. இந்த நாத சக்தி எங்கும் நிறைந்த தும் இயற்கையின் மையமானதும், நுண்ணியதுமாக இருந்து கொண்டு எல்லா சக்திகள், அதிர்வுகள், அசைவுகளுக்கும் மூலமாக இருக்கிறது. இயற்கையை ஆழமாக ஆராய்ந்த அறிஞர்கள் மிக நுண்ணிய சப்தம் ஓங்காரமாக இருப்பதாகக் கூறுகிறார்கள். இந்த ஓங்கார நாதம் சுயமாக வெளிப்பட்ட எங்கும் நிறைந்த, நித்தியமான உணர்வு சக்தியான பிரம்மத்திலிருந்து வெளிப்பட்ட பரிணாம அதிர்வாகும். கட்டிகாரத்தில் உள்ள ஊசலை அலையவிட்டால் அது தொடர்ச்சியாக கடிகாரத்தை நாமாக நிறுத்தும் வரை அசைந்து கொண்டிருக்கும் என்பதை நாமறிவோம்.

இதைப்போன்று பிரபஞ்சத்தில் இருக்கும் நுண்ணிய துணிக்கைகள் ஓங்காரம் எனும் நாதத்ததினால் தூண்டப்பட்டு அசைந்துகொண்டிருக்கிறது. இயற் கையின் சுழற்சி எப்படி ஒரு விளையாட்டு ஊசல் சுழன்றுகொண்டு இருக்கிறதோ அப்படி சுழன்று கொண்டு இருக்கிறது. இந்த விளையாட்டு ஊசலின் இயக்க சக்தி சிறிது காலத்தில் தேய்ந்து விடும் ஆனால் நித்தியமான பரிணாம சக்தியான பிரம் மத்தின் இயக்க சக்தி எப்போதும் தேய்மானம் அடையாமல் நிரந்தரமாக இருக்கிறது.

சப்த சுரங்கள் என்பவை ஓங்காரத்தின் ஏழு வித்தியாசமான அதிர்வுகளாகும். இந்திய இசையினை பாரம்பரிய இசை, மெல்லிசை என இரண்டு விதமாக பிரிக்கலாம். பாரம்பரிய இசையின் அமைப்பினை சுரம், பதம், லயம், மார்க்கம் என நான் கு பகுதிகளுடையதாக பிரிக்கலாம். சுரம் இல்லாத பாடல்கள் அபிதானவான எனப்படும். இவை அபிவாதனம் – உரையாடல் செய்யும் போது பாவிக்கும் கோர்வையான சொற்களைக் குறிக்கும்.

ஓங்காரம் என்ற மூல நாதம் பிரபஞ்சத்திலுள்ள எல்லா அதிர்வு சக்திகளினதும் தொகுப்பாகும். இதுவே அனைத்து இசைச் சுரங்களிற்கும் மூலமாகும். எப்படி சூரியனிலிருந்து ஏழு நிறங்கள் வெளிப்படுகிறதோ அதைப்போல் ஓங்காரத்திலிருந்து சப்த ஸ்வரங்கள் வெளிப்படுகிறது. இந்த இசைச் சுரங்கள் ஸ, ரி, க, ம, ப, த, நி என ஏழாக வெளிப்படுகிறது.

தொடரும்...

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்





கொழும்பு ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தின் ஆடிமுருக வேல் விழாவையொட்டி இடம்பெற்ற இரத உற்சவத்தில் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமிகள் அலங்கார சித்திர இரதத்தில் எழுந்தருளி வீதி உலாவருவகையில் எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: வட கொழும்பு தினகரன் நிருபர்)

## நீர் கட்டண...

காலத்தில் நீர் கட்டணத்தை செலுத்தத் தவறினால் அவர்களுக்கான நீர் விநியோகத்தை துண்டிப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

அந்த அரசியல்வாதிகள் செலுத்தத் தவறியுள்ள நீர் கட்டணங்களின் நிலுவை 13 மில்லியனுக்கு மேற்பட்டதாகும் என தெரிவித்துள்ள அவர், அமைச்சர்கள், எம்பிக்கள், முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோரும்அதில்உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொது அதிகாரிகள் 90 மில்லியன் ரூபாவை இவ்வாறு செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்..

நீர் கட்டணத்தைச் செலுத்த வேண்டியுள்ள ஓய்வு பெற்ற அமைச்சர்களின் நிலுவையை, ஓய்வூதியத்தில் இருந்து அறவிடுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதா என்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்ட லுவல்கள் அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும், அவர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்து அது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

செலுத்தப்படாத மின்கட்டணத்தை மீள அறவிடுவதற்கான பொறிமுறையை ஏற்படுத்துமாறு சபாநாயகரிடம் கடிதம் ஒன்றின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் எனினும் இந்த விடயத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பது அரசியல்வாதிகளின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு அமைச்சுக்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லத்தின் நீர் கட்டணத்தை நிர்ணயிப்பது சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் என்பதால் இந்த விடயத்தில் அரசியல்வாதிகளை மட்டும் குறை கூற முடியாது என தெரிவித்துள்ள அவர், இனிமேல் உத்தியோக பூர்வ இல்லத்தின் சாவிகள் வழங்கப்படும் போது இரண்டு மாதங்களுக்குள் நிலுவைத் தொகையை செலுத்தாவிட்டால் நீர் விநியோகம் துண்டிக்கப்படும் என்ற உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மொத்த நீர் பாவனையாளர்களிடமிருந்தும் 5.2 பில்லியன் ரூபாவை நிலுவையாக அறவிட வேண்டியுள்ளதாகவும் இது மொத்த நிலுவைத் தொகையில் 70 வீதமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நீர் கட்டண பட்டியல் விநியோகிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் கட்டணம் செலுத்தாவிட்டால் 1.5 சதவீத கழிவு வழங்கப்படாதுடன் 30 நாட்களுக்குள் பணம் செலுத்தாவிட்டால் 2.5 சதவீதம் கூடுதல் கட்டணமாக அறவிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு நீர் பாவனையாளர்கள் செலுத்தத் தவறியுள்ள தொகையின் பெறுமதி எழுநூறு கோடி ரூபாவாகும் என தெரிவித்துள்ள அவர், 10 இலட்சத்துக்கு அதிகமான வாடிக்கையாளர்கள் நீர் கட்டணத்தை செலுத்த தவறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளிடமிருந்து நீர் கட்டண நிலுவைத் தொகையாக 13 மில்லியன் ரூபா அறவிடப்பட வேண்டியுள்ளது. அத்துடன் பொது உத்தியோகபூர்வ இல்லங்களில் வசிக்கும் அதிகாரிகள் 90 மில்லியன் ரூபாவை இவ்வாறு வழங்க வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஒன்றிணைந்து.. 03ஆம் பக்க தொடர்

வேண்டும்.

நாம் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொண்டாலும் அல்லது பெற்றுக் கொள்ளாவிட்டாலும் ஒன்றிணைந்து செயல்படக்கூடிய சவால் மற்றும் மக்கள் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கும் மக்கள் கட்சியின் தலைவர் அசங்க நவரத்தினவிற்கும் இடையில் நடைபெற்றுள்ள கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## பஸ்களுக்கான புதிய... 03ஆம் பக்க தொடர்

கொட்டாவ மகும்புர மல்டிமோடல் சென்டரில் முதன்முறையாக முற்பணம் செலுத்தப்பட்ட கொடுப்பனவு அட்டை முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய பொதுமக்கள் தங்கள் பயணத்திற்கு தேவையான தொகையை முன்கூட்டியே செலுத்தி பஸ் அட்டையை பயன்படுத்த முடியும்.

தற்போது மக்கள் வங்கியில் பாதுகாப்பான கட்டண நுழைவாயிலின் கீழ் மாத்திரமே இந்த பஸ் அட்டையை பெற்றுக்கொள்ள முடியும்.

பொதுப் போக்குவரத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வாக எதிர்வரும் காலங்களில் பஸ் முற்பண அட்டை முறையை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மேலும் தொடர்ந்து சேவைகளுக்கும் இவ்வாறான அட்டை முறையை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி ரணில்... 03ஆம் பக்க தொடர்...

மிஹிது மகா தேரருக்கும், இலங்கையை ஆண்ட தேவநம்பியதிஸ்ஸ மன்னனுக்கும் இடையே 2330 ஆண்டுகளுக்கு முன்பு முதலாவது இராஜ தந்திர

சந்திப்பு இந்த மிஹிந்தலை புனிதத் தளத்தில் நடந்ததாகக் கூறப்படுகிறது. இங்குதான் அறங்காவலர் கருத்தியல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இன வேறுபாடு இல்லை. கட்சி, நிற பேதமில்லை. அனைவரும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அறங்காவலர் கருத்தியல் மாத்திரமே அங்கு இருந்தது. அது மட்டுமன்றி, இந்த பூமியில் உள்ள

இலைகள், மரங்கள் முதல் அனைத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு, பாதுகாவலருக்கு அல்லது ஆட்சி புரிபவருக்கு உள்ளது என்று மிஹிது மஹா தேரர் அன்று போதித்தார். 2330 வருடங்களின் பின்னர்

அதேபோன்று, இந்த நாட்டைப் பொறுப்பேற்று, பாதுகாப்பதற்காக ஆசிகளைப் பெற்றுக்கொள்ள எமது ஜனாதிபதி, இங்கு வருகை தந்துள்ளமை எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அவரை ஆசிர்வதிக்கிறோம் என்றார்.

## லாப் Gas விலை ...

அவர் குறிப்பிட்டுள்ளார். 12.5 கிலோ எடை கொண்ட லாஃப் கேஸ் சிலிண்டரின் தற்போதைய விலை 5,800 ரூபாவாகவும் 5 கிலோ எடை கொண்ட சிலிண்டரின் விலை 2,320 ரூபாவாகவும் 2.5 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 928 ரூபாவாகவும் காணப்படுகிறது.

## 16ம் மாடியிலிருந்து... 03ஆம் பக்க தொடர்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சபுகஸ்கந்தவில்... 03ஆம் பக்க தொடர்

பதிவிட்டுள்ளார்.

அத்துடன் ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் அடங்கிய இரண்டாவது கப்பல் அடுத்த வாரம் நாட்டை வந்தடையும்.

குறித்த இரண்டு கப்பல்களில் கொண்டு வரப்பட்ட இந்த மசகு எண்ணெய்யின் ஊடாக எதிர்வரும் 40 நாட்களுக்கு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்க முடியும். இதேவேளை, ஜெட் எரிபொருள் நேற்று முன்தினம் இரவு முதல் தரையிறக்கப்படுவதாகவும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

## மலையக சிறுமி நீச்சல்... 03ஆம் பக்க தொடர்

உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் கம்பஹா பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட வீட்டின் உரிமையாளர் தெரிவிக்கையில், ரமணி இரவு படுக்கைக்கு செல்லும் முன் கையடக்க தொலைபேசியில் பேசிய வண்ணம் வீட்டில் உள்ள நீச்சல் தடாகத்தில் விழுந்து கிடந்த காட்சியை அங்கு பொருத்தப்பட்டிருந்த CCTV கமராவில் பதிவாகி உள்ளதாக அவர் கூறினார்.

மேலும், இந்த இளம் யுவதி கடந்த சில மாதங்களுக்கு முன் மாமா மூலம் கம்பஹாவில் உள்ள வீட்டிற்கு வேலைக்கு சென்றுள்ளார்.

இந்த யுவதிக்கு பெற்றோர் இல்லை என்பது தெரியவந்துள்ளது. பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் அவரது மாமாவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இது குறித்து கம்பஹா பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழ். பலாலி விமான... 03ஆம் பக்க தொடர்

வாய்ப்புகள் செய்து கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டுக்கு தினமும் சுமார் 2000 சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாகவும் அதனை 7000மாக அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய உல்லாசப் பிரயாணிகளை அதிகளவில் இலங்கைக்கு அழைக்கும் வகையில் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பயணம் ஒன்றை அமைச்சர் இந்தியாவுக்கு மேற்கொண்டுள்ளார்.

இந்தியாவில் அகமதாபாத் நகரில் அது தொடர்பில் நடைபெற்ற வைபவத்திலும் அவர் கலந்து கொண்டுள்ளார். அதனையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## அரசின் வேலைத்திட்டங்களுக்கு...

மாகாண ஆளுநர்களுடன் பிரதமர் அலுவலகத்தில் (19) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் தினேஷ் குணவர்த்தன இந்த விடயங்களை தெரிவித்தார்.

## வேலை செய்ய முடியாதோர்...

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆராய்தல் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த மேற்படி கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி மாகாண மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி:

மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு நான் எவரையும் கேட்டுக் கொள்ளவில்லை.

எனினும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தாமதமின்றி ஒன்றிணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

பழைய அரசியல் முறைமையை மக்கள் நிராகரித்துவிட்ட நிலையில் புதிய அரசியல் நிகழ்ச்சி நிரல் மற்றும் நேர்மையான அரசியல் பயணம் நாட்டிற்கு அவசியமாகிறது.

அடிமட்டத்தில் உள்ள அரச அதிகாரிகள் தமது கிராம சேவை அதிகாரி பிரிவில் அபிவிருத்தி மற்றும் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

எவருக்கும் வெறுமனே உணவு வழங்குவதற்கு அரசாங்கம் தயாரில்லை.

வேலை செய்ய முடியாதவர்கள் வேலையை விட்டு நீங்கிக் கொள்ள வேண்டும் என தான் கேட்டுக் கொள்வதாகவும் ஜனாதிபதி இதன் போது தெரிவித்துள்ளார்.

## கோழி இறைச்சிக்கும் ....

அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக வர்த்தக, உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் இந்த வாரத்தில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ள அமைச்சர், எவ்வாறாயினும் கோழிப்பண்ணை உரிமையாளர்கள் கோழி இறைச்சியின் விலையை குறைப்பதற்கு இணக்கம் தெரிவித்தால் கட்டுப்பாட்டு விலைக்கான அவசியம் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார். பொருட்களின் விலை தொடர்ச்சியான அதிகரிப்பு தொடர்பில் தெரிவித்துள்ள அமைச்சர்,

கடந்த இரண்டு வாரங்களில் பருப்பு, உருளைக்கிழங்கு, வெங்காயம், செத்தல் மிளகாய் உள்ளிட்ட பல அத்தியாவசிய பொருட்களின் மொத்த விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க அத்தகைய அத்தியாவசியப் பொருட்களின் சில்லறை விலைகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் கடந்த இரண்டு தினங்களுக்கு முன் முட்டைக்கான அதி உச்ச சில்லறை விலை தொடர்பில் வர்த்தமானி ஒன்றை வெளியிட்டிருந்தது. அதன்படி வெள்ளை முட்டை 43 ரூபாவாகவும் சிவப்பு முட்டை 45 ரூபாவாகவும் விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாடு பொருளாதார முன்னேற்றம்....

இந்த நெருக்கடி நிலைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மட்டும் காரணமல்ல. நானும் எனக்கு முன்னர் நாட்டை ஆண்ட அரசாங்கங்கள் உட்பட அனைவரும் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆங்கில வார இறுதி பத்திரிகை ஒன்றுக்கு அவர் வழங்கியுள்ள பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

கோட்டாபய ராஜபக்ச ஒரு அரசியல்வாதி அல்ல. அவர் நாட்டை விட்டு செல்வதற்கு முன்பு என்னிடம் ஆலோசனை கேட்டிருக்க வேண்டும். அதனை அவர் செய்யவில்லை.

அவர் தீர்மானம் எடுத்துவிட்டே என்னிடம் நான் வெளிநாடு செல்லப் போகிறேன் என தெரிவித்தார்.

அதற்கு நான் பதிலளிக்கும் வகையில் எதையும் கூறவில்லை. அவரது ஆட்சியின் கீழ் கடந்த மே மாதம் வரை நான் பிரதமராக பதவி வகித்துள்ளேன்.

அவர் வெளிநாடு போவதாக என்னிடம் கூறியிருந்தால் நான் வேண்டாம் என்றே சொல்லி இருப்பேன்.

அவரை குறை கூற முடியாது. முன்னாள் மத்திய வங்கி ஆளுநர்கள் உட்பட அவருக்கு ஆலோசனை வழங்கிய நிபுணர்களை அவர் நம்பினார். எவ்வாறாயினும் அவர் தமக்கான பணிகளை சரியாக நிறைவு செய்திருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வரலாற்றில் முதற்....

இதனடிப்படையில் இந்த சேவையை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு " யாழ். ராணி " புகையிரதத்தில் பயணித்தார்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்தடைந்த அமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

வரலாற்றில் முதல் தடவையாக யாழ் மக்களை கருத்தில் கொண்டு அதிகளவான சேவைகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளோம்.

புதிதாக காங்கேசன்துறை கிளிநொச்சி அறிவியல் நகருக்கு இடையிலான "யாழ் ராணி" சேவை , தடைப்பட்டிருந்த இரவு தபால் சேவை மீள ஆரம்பம், உத்தரதேவி மற்றும் கடுகதி சேவைகளின் தரிப்பிட நிலையங்களை அதிகரித்துள்ளமை உள்ளிட்டவற்றை செயற்படுத்தியுள்ளோம்.

இவற்றுடன், யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசிய பொருட்களை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்காக சரக்கு ரயில் சேவைகளை பயன்படுத்த அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்திருந்தார். அதற்குரிய திட்ட முன்மொழிவுகள் புகையிரத திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகிறது.

இதனடிப்படையில் இந்த சேவையை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம்.

மேலும், முல்லைத்தீவு, வவுனியா, மற்றும் அநுராதபுர மாவட்ட பணியாளர்கள், பல்கலை மாணவர்களை கருத்தில் கொண்டு, ஓமந்தை அறிவியல் நகர் புகையிரத சேவையை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

அத்துடன் தடைப்பட்டுள்ள "ஸ்ரீதேவி" சேவையை மீள ஆரம்பிப்பதற்கு, பயணிகளின் ஆதரவை எதிர்பார்த்துள்ளதாகவும், அதிகளவு பயணிகள் பயணிப்பார்கள் என்றால் அச்சேவை மீளவும் ஆரம்பிக்கப்படும்.

இதேவேளை, பஸ், முச்சக்கர வண்டி உள்ளிட்ட தனியார் போக்குவரத்து சேவைகளின் கட்டண நிர்ணயத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மேற்கொள்ளும். முச்சக்கர வண்டிகளின் கட்டண அறவீடு தொடர்பாக சட்டத்திருத்தமொன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்படும்.

அத்துடன் அதிகரித்த கட்டணத்தை அறவிடுவோர் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் பொது மக்களை முறைப்பாடுகளை செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

## உள்ளூராட்சி மன்ற ...

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் ஒரு வருடத்தினால் நீடிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த பதவிக்காலம் அடுத்த வருடம் மார்ச் மாதம் 25 ஆம் திகதியுடன் நிறைவடைவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்படி, செப்டம்பர் 20 ஆம் திகதிக்குப் பிறகு தேர்தல் திகதியை அறிவிக்க தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சகல மக்களையும்...

உலகில் ஏனைய நாடுகள் சாதனைகளுடன் நாளுக்கு நாள் முன்னோக்கிச் செல்லும் போது, நாம் ஒன்றிணையாத காரணத்தி னா ல் பின்னோக்கி செல்வதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த வரலாற்று தவறை சரிசெய்து அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டை கட்டியெழுப்புவதே தமது நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சனிக்கிழமை அநுராதபுரத்திற்கு விஜயம் செய்து மத வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## ரஞ்சன் ராமநாயக்க....

அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி ஜனாதிபதி ஆவணங்களில் கையொப்பமிட்டதன் பின்னர் ரஞ்சன் ராமநாயக்க விடுவிக்கப்படுவார் என அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு கடந்த ஜனவரி மாதம் 12 ஆம் திகதி 04 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு விடுதலை வழங்குவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டன, அதற்காக அவர் கடந்த 13 ஆம் திகதி சத்தியக் கடதாசியில் கையெழுத்திட்டுள்ளார்.

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு...

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடனும் என்னுடனும் பேச்சு நடத்தியுள்ளனர்.

அவர்களின் நியாயமான கோரிக்கை தொடர்பில் பரிசீலித்து வருகின்றோம்.

அதற்கமைய முதல் கட்டமாகக் குறிப்பிட்ட சில தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும். அதன்பின்னர் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கி விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அவற்றுள் அரசியல் கைதிகள் விவகாரமும் ஒன்று. இதனைக் கருத்தில்கொண்டு அரசு செயற்படும் என்றார்.

## 2030 லீற்றர் பெற்றோலை....

வாரியாபொல பகுதியிலிருந்து கற்பிட்டிக்கு பெற்றோலை அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக கொண்டு செல்லப்படுவதாக கற்பிட்டி கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கெப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய கற்பிட்டி மீன் வாடியில் வைத்து குறித்த லொறியை மறைத்து சோதனைகளுக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது 2030 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் மூவர் கடற்படைப் புலனாய்வுப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கற்பிட்டி, வாரியபொல, ரத்மலான பகுதிகளைச் சேர்ந்தவர்களென கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபருடன் பெற்றோல் மற்றும் கடத்துவதற்கு பயன்படுத்திய லொறி ஆகியவை மேலதிக நடவடிக்கைகளுக்காக கற்பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## வருமானம் குறைந்தோருக்கு ...

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அமைச்சரவையில் முன்வைத்தார்.

அந்த யோசனைக்கு தற்போது அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அதனை விரைவாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அதிக வருமானம் பெறும் தரப்பினருக்கும் குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கும் ஒரு அலகு நீருக்கு ஒரே அளவான கட்டணத்தை செலுத்துகின்றனர்.

அந்த முறைமைக்கு பதிலாக, குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு சலுகைகள் வழங்கவும், அதிக நீரை பயன்படுத்தும் அதிக வருமானம் பெறுபவர்களுக்கு வேறு முறையில் கட்டணத்தை அறவிடவும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தீர்மானித்துள்ளது.

இதற்கமைய வீட்டுப்பாவனைக்கான நீர்வசதியை மாத்திரம் பெறுபவர்களின் புதிய நீர்கட்டணங்களின்படி, குறைந்தளவிலேயே கட்டணம் அதிகரிக்கரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சஜித் பிரேமதாசவின்...

பிரேமதாசவுக்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

இதனடிப்படையில் அவர் சனிக்கிழமை (20) முற்பகல் குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

வாக்குமூலம் வழங்கிய பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள துலாஞ்சலி பிரேமதாச, தற்போதைய ஜனாதிபதியின் வீடு எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் வழங்க வருமாறு அழைத்தனர்.

நான் வந்து வாக்குமூலம் வழங்கினேன். சம்பவம் நடந்த போது நான் அங்கு ஓரிடத்தில் இருந்தேன்.

விசாரணைகளுக்கு உதவுவதற்காக என்னை வருமாறு அழைத்தனர். விசாரணை அதிகாரிகள் நட்புறவாக உரையாடினர்.

ஒவ்வொருவரும் தனிப்பட்ட ரீதியில் போராட்டங்களை நடத்தினர். விசாரணைகளுக்கு உதவ வந்து வாக்குமூலம் வழங்குமாறு கூறும் போது நாம் வந்து உண்மையை கூறினால், எமக்கு எந்த பிரச்சினையுமில்லை.

அந்த பிரதேசத்திற்கு சென்றிருந்தால் அழைத்து விசாரித்தனர். வேறு விடயங்கள் இல்லை. இத்தோடு முடிந்து விட்டது என துலாஞ்சலி கூறியுள்ளார்.

## தமிழ் மக்களி அவலங்களில்....

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# தமிழ் அரசியல் கட்சிகளின் சுயலாப அரசியல்

ஆனால், ஈ.பி.டி.பி. யினராகிய நாம் அவலங்களை தீர்த்து வைத்து, மக்களின் மாற்றத்தை நோக்கி பயணிக்க விரும்புகிறோம்.

எங்காவது ஓரிடத்தில் நெருப்பு எரிகின்றது என்றால், அதில் அவர்கள் எண்ணெய் ஊற்றி பற்றி எரிய வைக்கிறார்கள். ஆனால், நாம் எரிகின்ற இடத்தில் தண்ணீரை ஊற்றி எரியும் நெருப்பை நிரந்தரமாக அணைய வைக்க விரும்புகிறோம்.

இதுவே எமக்கும் ஏனைய சுயலாப தமிழ் அரசியல் கட்சி தலைமைகளுக்கும் இருக்கும் வேறுபாடு. எமது நடைமுறைச் சாத்தியமான அரசியல் வழிமுறை பட்டிதொட்டி எங்கும் நெருப்பாக பற்றிக்கொள்ளும் வகையில் எடுத்துச் செல்லப்பட வேண்டும்" என்றும் தெரிவித்துள்ளார்.

## தேசிய Fuel Pass தளத்தை நடைமுறைப்படுத்த

# டயலொக் ஆசிஆட்டா, MIT, ICTA ஆகியவற்றுக்கு அங்கீகாரம்

தேசிய Fuel Pass தளத்தை நடைமுறைப்படுத்துவதற்காக டயலொக் ஆசி ஆட்டா, MIT மற்றும் ICTA ஆகியவை மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியை நிர்வகிப்பதற்காக இந்த தளத்தை டயலொக் மற்றும் MIT, மின் சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

தேசிய Fuel Pass அமைப்பின் வசதியாளர்களான, நாட்டின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MillenniumIT ESP மற்றும் ICTA ஆகிய நிறுவனங்களுக்கு மின்சார மற்றும் வலுசக்தி அமைச்சு தனது பாராட்டுகளை தெரிவித்தது. சமீபத்தில், ஒரு நிகழ்வின்போது, மூன்று நிறுவனங்களின் விலை மதிப்பற்ற மற்றும் அத்தியாவசியமான பங்களிப்பு மற்றும் நிபுணத்துவம் ஆகியவை தளத்தின் மேம்பாடு மற்றும் ஒதுக்கீடு அடிப்படையிலான எரிபொருள் விநியோக முறையை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்காக அமைச்சகம் அங்கீகரித்தது.



டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சியின் குழும பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி அமலி நாணாயக்கார, டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சியின் குழுமத் தலைமை நிதி அதிகாரி Hong Zhou Wong, ICTA இன் தலைவர், ஜயந்த டி சில்வா, டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, மின்சக்தி மற்றும் வலு சக்திஅமைச்சர் காஞ்சன விஜேசேகர, மின் சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன, Millennium IT ESP இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷெவன் குணதிலக்க ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.



டயலொக் ஆசிஆட்டாபி எல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹவிற்கு பாராட்டுச் சின்னத்தை மின் சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சின் சார்பாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் மின்சக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன ஆகியோர் வழங்குகின்றார்கள்.



Millennium IT ESP இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷெவான் குணதிலக்கவிற்கு பாராட்டுச் சின்னத்தை மின் சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சின் சார்பாக மின் சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் மின் சக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன ஆகியோர் வழங்குகின்றார்கள்.

செயல்படுத்தப்பட்டதிலிருந்து, தேசிய Fuel Pass தளம் நாடளாவிய ரீதியில் உள்ள 93% எரிபொருள் நிலையங்களால் வெற்றிகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் இன்றுவரை 11 மில்லியனுக்கும் அதிகமான பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுமக்கள் எரிபொருளைப் பெறுவதற்கு வசதியான மற்றும் எளிதில் அணுகக்கூடிய தீர்வை வழங்குவதற்கும், ஒதுக்கீடு அடிப்படையிலான எரிபொருள் விநியோக முறையை எளிதாக்குவதற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய Fuel Pass, இன்றுவரை 6 மில்லியன் வாகனப்பதிவுகளைத் தாண்டியுள்ளது.

டயலொக் மற்றும் MillenniumIT ESP ஆகியவை தேசிய Fuel Pass தளத்தை அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு இலவசமாக ஆதரிக்கவுள்ளதுடன் மேலும் சிறப்பு பிரிவுகளின் தேவைகளைப் பூர்த்திசெய்ய மேலதிக செயல்பாடுகளை அறிமுகப்படுத்த மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சகம் மற்றும் ICTA ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும். இலங்கை மக்களுக்கு நிலையான எரிபொருள் விநியோக முறையை வழங்குவதோடு, தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது பாரியளவிலான தேசிய சேமிப்பிற்கு வழிவகுத்தது, மேலும் எரிபொருள் இறக்குமதிக்கான மாதாந்த செலவு 500 மில்லியனிலிருந்து 230 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது கருத்து தெரிவித்த மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் கௌரவ. அமைச்சர் காஞ்சன விஜேசேகர, "இலங்கை அரசாங்கத்தின் சார்பாக, தேசிய எரிபொருள் அனுமதிச் சட்டத்தின் மூலம் பொதுமக்களின் எரிபொருள் நெருக்கடியின் சுமையைக் குறைக்க மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுடன் இணைந்துக் கொண்டமைக்காக ICTA, MillenniumIT ESP மற்றும் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி ஆகியவற்றுக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தேசிய நெருக்கடிக்கு உடனடித் தீர்வைக்காண்பதில் உறுதியான அர்ப்பணிப்புடன் நேரமறையாகவும் செயலூக்கமாகவும் இருப்பதற்காக அனைத்து பங்குதாரர்களுக்கும் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். லங்கா IOC மற்றும் சிலோன் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆதரவு மற்றும் தேசிய இளைஞர் கழகம் மற்றும் தேசிய இளைஞர் பேரவையின் தனிநபர்களின் தன்னார்வ முயற்சிகள் இல்லாவிட்டால் இந்த முயற்சி இன்றுள்ள முழுஅளவிலான வெற்றியினை கண்டிருக்காது. ஒவ்வொரு தனிநபருக்கும் அவர்களின் அன்றாட நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கான உத்தரவாதமான எரிபொருள் ஒதுக்கீட்டை வழங்குவதே எங்களின் நோக்கமாக இருந்தது, மேலும், இந்த அமைப்பு மூலம், நாங்கள் அதை இன்று நனவாக்கியுள்ளோம்.

இந்த முன்முயற்சி பற்றி கருத்து தெரிவித்த, ICTA இன் தலைவர் ஜயந்த டி சில்வா, "இந்த தேசிய முன்முயற்சியின் ஒரு பகுதியாக இருந்ததற்கும் தேசிய Fuel Pass இன் வளர்ச்சிக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்கும் வாய்ப்பு கிடைத்தமையினையிட்டு நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம்.

Fuel Pass இன் தாக்கம் பொருளாதார கண்ணோட்டத்தில் இருந்தும் சமூக கண்ணோட்டத்தில் இருந்தும் பிரமாண்டமாக தெரியும். நமது தேசம் எதிர்கொண்டுள்ள சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தொழில்நுட்பத்தின் பங்கு மிக முக்கியமானது என்று நான் உறுதியாக நம்புகின்றேன். அரசாங்கத்தின் அனைத்து ICT திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கான உயர் மட்ட அமைப்பாக, இலங்கையர்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் பயனுள்ள டிஜிட்டல் தீர்வுகளை இயக்குவதற்கு தேவையான பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்.

டயலொக் ஆசிஆட்டாபி எல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ கருத்து தெரிவிக்கையில், "இந்த தேசிய முயற்சியின் ஒரு அங்கமாக எங்களை அழைத்தமைக்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுக்கு நாங்கள் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். முழுநாடும் ஸ்தம்பிதமடைந்தபோது, தொழில்நுட்பத்தின் சக்தியின் மூலம் தேசம் இந்த சவாலை சமாளிக்க உதவுவது எங்கள் பொறுப்பு என்று டயலொக்கில் நாங்கள் உணர்ந்தோம். Millenium IT மற்றும் ICTA ஆகியவற்றின் உதவியுடன், டயலொக்குழு மீண்டும் நமது நாட்டின் மிகப்பெரிய தேவையின்போது நிலையான எரிபொருள் மேலாண்மை அமைப்புடன் ஒன்றுகூடி, 3 வாரங்களுக்குள் தீர்வை வழங்க முன்வந்ததுடன், தேசத்தின் முன்னேற்றத்திற்கு உதவுவதற்கான தீர்வின் செயல்பாட்டை துரிதப்படுத்தியது.

MillenniumIT ESP இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷெவன் குணதிலக்க கருத்துத் தெரிவிக்கையில், "எரிபொருள் வரிசைகளை நீக்குதல், மில்லியன் கணக்கான டாலர்களை மிச்சப்படுத்துதல் மற்றும் தேசத்திற்கு நியாயமான எரிபொருளை விநியோகிப்பதை உறுதி செய்தல் ஆகியவை தேசிய Fuel App இனை வெற்றிகரமாக செயல்படுத்தியமைக்கான சான்றாகும்.

தேசிய அளவில் App இனை தொடங்குவது என்பது சந்தேகத்திற்கு இடமின்றி சவாலான விடயமாகும். இருப்பினும் அமைச்சரின் வழிகாட்டுதல் மற்றும் அமைச்சகத்தின் சிறந்த ஒத்துழைப்பு, ICTA, MillenniumIT ESP மற்றும் டயலொக் ஆகியவை இறுதி இலக்கை அடைவதில் பங்களித்தன.

தேசிய Fuel App ஆனது, ஒரு தேசிய நெருக்கடியைத் தணிக்க தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது. இந்த செயற்றிட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து குழுக்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்" என மேலும் தெரிவித்தார்.

## கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவருக்கு வாழ்த்து





தமிழக அரசின் சார்பில் தமிழக முதல்வர் மு. க ஸ்டாலின் அவர்களிடம் இருந்து தகைசால் தமிழர் விருது பெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர். நல்லகண்ணு அவர்களை சென்னை நந்தவனத்தில் அவரது இல்லத்தில் சந்தித்து மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் சி மகேந்திரனும் இந்த சந்திப்பின்போது கலந்துகொண்டுள்ளார். எளிமையான மனிதரின் சிகரம் எனப் போற்றப்படும் நல்லகண்ணு அவர்களுக்கு தமிழக முதல்வர் வழங்கிய பத்து இலட்சம் ரூபாய் (இலங்கை பெறுமதி 45இலட்சம்) அன்பளிப்பு தொகையை நிவாரண பணிகளுக்கு பயன்படுத்துமாறு திருப்பிக் கொடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மாத்தறை மாவட்ட

# விவசாயிகளின் விதை நெல் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## மாவட்டச் செயலாளர் தெரிவிப்பு

*மாத்தறை தினகரன் நிருபர்*

மாத்தறை மாவட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் விதை நெல் பிரச்சினைக்குத் தீர்வு காண மாவட்டச் செயலாளர் வை. விக்கிரமசிறி நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி மாவட்ட கமத்தொழில் திணைக்களத்தின் அனுசரணையுடன் இத் திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கிறது. மாவட்டடத்தின் ஒவ்வொரு போகத்தின் போதும் விதை நெல் பெற்றுக்கொள்வதில் விவசாயிகள் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. இதனால் வெளி மாவட்டங்கிளிலிருந்து விதைநெல் கொள்வனவு செய்து விவசாயிகளின் பிரச்சினை தீர்க்கப்பட்டது.

எனவே, இம்முறை போகத்தின் போது மாத்தறை மாவட்டத்தின் விதைநெல் பிரச்சினையை மாவட்டத்திற்குள்ளேயே தீர்த்து வைக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

திக்குவல்லை, ஹக்மனை, மாலிம்மடை, அக்குரஸ்ஸ, பிடபத்தர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் விதைநெல் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த போகத்தின் போது இம் மாவட்டத்தில் சுமார் 14,000 ஏக்கரில் நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



அநுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான இடர் முகாமைத்துவம் தொடர்பில் ஒரு நாள் செயலமர்வு (19) வெள்ளிக் கிழமை அநுராதபுரம் ரன்திய உணவகத்தில் நடைபெற்றது . இதன் போது மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர ஊடகவியலாளர்களுடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட படத்தை காணலாம்.

படம்: அநுராதபுரம் மேற்கு, திறப்பனை, அனுராதபுரம், கல்நேவ தினகரன் நிருபர்கள்

### களுத்துறை மாவட்டத்தில்

# தமிழ்த் தினப் போட்டிகள் சிறப்பாக முன்னெடுப்பு

## வாய் மொழிப்போட்டிகள் இம்மாதம் 25ஆம் திகதி

*பேருவளை விசேட நிருபர்*



களுத்துறை மாவட்டத்தின் 2022ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தினப் போட்டிகள் களுத்துறை வலயத் தமிழ்ப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர்களான முஹம்மட் இல்யாஸ் மற்றும் சின்னய்யா ஜெயகுமார் ஆகியோரின் தலைமையில் இரண்டு கட்டங்களாக நடைபெற்று வருகின்றன.

முதற்கட்டமாக தமிழ்த்தின எழுத்தறிவுப் போட்டிகள் அனைத்தும் கடந்த ஆகஸ்ட் 10ஆம் திகதி நான்கு மத்திய நிலையங்களில் நடைபெற்றன. இப்போட்டிகளை வலயத்தின் ஆசிரிய ஆலோசகர்கள் மேற்பார்வை செய்து நடத்தி வைத்தனர்.

களுத்துறை ஆண்கள் மத்திய கல்லூரியில் நடைபெற்ற போட்டிகளில் 6 பாடசாலைகளும், பேருவளை சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையில் 7 பாடசாலைகளும், பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரியில் 5 பாடசாலைகளும், தர்காநகர் ஸாஹிராக் கல்லூரியில் 3 பாடசாலைகளும் பங்குபற்றின. இப்போட்டிகளை அன்வர், புகாரி மொகமட், முஹம்மட், மூமினா, பாரிஹா, நவ்பிஸ், றிஹான், ரபீக் மொஹிடீன், ஸக்வான் அதிபர் ஆகியோர் மேற்பார்வை செய்தனர். இரண்டாம் கட்டமாக தமிழ்த்தின வாய்மொழிப் போட்டிகள் இம்மாதம் 25 ஆம் திகதி களுத்துறை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.


திகதி 19.08.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4852 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,460,030.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 38,345,034.60 — ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 2 4 8 4 7 6

திகதி 20.08.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4853 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,162,700.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 38,702,986.60 — ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 3 0 2 9 4 6

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 1311 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,420,720.00 — வெற்றி இலக்கங்கள் 4 0 0 1 1 2 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,774,064.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம்: 883 — ரூ. 1,977,360.00 — T 11 31 37 49 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 122,064,709.60
தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம்: 882 — ரூ. 2,049,200.00 — W 29 56 61 66 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 121,883,999.20

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3095 — ரூ. 4,908,440.00 — M 03 13 37 40 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 70,703,278.40
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3094 — ரூ. 3,882,760.00 — M 15 23 42 58 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 70,612,591.60

ராசிசுப பலன் — சீட்டிழுப்பு இலக்கம்: 162 — ரூ. 5,380,460.00 — மகரம் 32 33 59 61 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,029,455.80
ராசிசுப பலன் — சீட்டிழுப்பு இலக்கம்: 161 — ரூ. 5,607,400.00 — சிம்மம் 07 16 43 58 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,961,587.60

Mega Power மெகா பவர் 26+ — சீட்டிழுப்பு இலக்கம் 1201 — ரூ. 2,816,360.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 266,678,866.00 — Y 13 11 14 34 65 — ரூ. 10,000,000.00
Mega Power மெகா பவர் 26+ — சீட்டிழுப்பு இலக்கம் 1200 — ரூ. 2,891,020.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 266,446,278.00 — R 20 11 19 41 77 — ரூ. 10,000,000.00

National Lotteries Board — www.nlb.lk

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஓகஸ்ட் 22
திங்கட்கிழமை

# கொழும்பிலிருந்து வடபகுதிக்கு அத்தியாவசிய பொருட்களை கொண்டு செல்ல புகையிரத சேவைகள்

***சாவகச்சேரி விஷேட நிருபர்***

கொழும்பிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவர புகையிரதங்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்ற பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் கோரிக்கை விரைவில் நடைமுறைக்கு வருமென அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன,

யாழ் மாவட்டத்திற்கு இருநாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார்.இச்சமயமே, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனிடம் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.



இதுபற்றி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

அத்தியவசியப் பொருட்களை கொழும்பிலிருந்து வடபகுதிக்கு கொண்டு செல்ல புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் என்னிடம் தெரிவித்தார்.இதற்கான முன்னாயத்த செயற்பாடாக புகையிரத திணைக்களம் திட்ட முன்மொழிவுகளை முன்னெடுத்து வருகிறது.

தற்போது நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்நிலையில் கொழும்பிலிருந்து வடபகுதிக்குத் தேவையான மருந்து உள்ளிட்ட அத்தியவசிய பொருட்களை எடுத்துவர புகையிரதங்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும். இதுபற்றி, யாழ் வர்த்தகர்கள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனிடம் கேட்டுள்ளனர். வர்த்தகர்களின் இந்த தேவை குறித்து அங்கஜன் இராமநாதன் எம்பி,என்னிடம் தெரிவித்தார்.

இதையடுத்து இதற்கான வேலைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# அறவழி போராட்டக்காரர்களை விடுவிக்குமாறு மன்னாரில் ஆர்ப்பாட்டம்




***தலைமன்னார் விஷேட நிருபர்***

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயற்பாட்டாளர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க வேண்டாம் எனக்கோரி மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று (21) இடம் பெற்றது

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் மன்னர் மெசிடோ நிறுவனத்தின் ஆதரவில் இந்த ஆர்பாட்டம் மன்னாரில் இடம் பெற்றது.

அரசியலமைப்பில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் கருத்துச்சுதந்திரம் என்பவற்றை உறுதிப்படுத்துமாறு இவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

தொழிற்சங்க நடவடிக்கைகளும், வெகுஜன போராட்டங்களும் பயங்கரவாத நடவடிக்கைகள் அல்ல, மாணவ செயற்பாட்டாளர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ரடோர்

தெரிவித்தனர்.எனவே,இவற்றைக் கருத்திற்கொண்டு

பல்கலைக்கழக மாணவ செயற்பாட்டாளர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க வேண்டாம் எனக் கோருவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்களால் தெரிவிக்கப்பட்டது.

## உறவுகளுக்கு நீதி கோரி 2009 நாளாகி விட்டது:

# சர்வதேசமே நீதி தரவேண்டுமென ஆர்ப்பாட்டம்

***வவுனியா விசேட நிருபர்***

கையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் காணாமலாக்கப்பட் ட தமது பிள்ளைகளுக்கு நீதி கோரி வீதிக்கு வந்து 2009 நாள் ஆகிவிட்டது. சர்வதேச தலையீடே உடன் தேவை என வலியுறுத்தி காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியாவில் ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது.

வவுனியா, ஏ9 வீதியில், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு முன்பாக 2009 ஆம் நாளாக சுழற்சி முறை போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தாய்மார்களால் இந்த ஆர்ப்பாட்டம் நேற்று (21) முன்னெடுக்கப்பட்டது.

கடைசி யுத்தத்தில்,காணமலாக்கப்பட்ட, உயிரிழந்த உறுவுகளுக்கு நீதிகோரி ,2009 நாளாக போராட்டம் நடாத்துகிறோம். எந்த நீதியும் கிடைக்கவில்லை.

எனவே,ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் தலையிட்டு எமக்கான நீதியைப் பெற்றுத் தர வேண்டும்.

முருகா நீயாவது கருணை காட்டு என கையெடுத்து கூம்பிட்டு கண்ணீர் மல்க' இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றின் கொடிகளை ஏந்தியிருந்ததுடன், காணாமலாக்கப்பட்ட உறவுகளின் புகைப்படங்களையும் ஏந்தியிருந்தனர்.

# பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கு அமைச்சர் விஜயம்: அதிகாரிகளுடன் பேச்சு

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துலகுணவர்த்தன, பருத்தித்துறை டிப்போவுக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டார்.யாழ்ப்பாணத்துக்கு இருநாள் விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர், அங்குள்ள முக்கிய இடங்களுக்கு விஜயம் செய்தார்.இதன் ஓர் அங்கமாகவே இந்த விஜயமும் அமைந்திருந்தது.

இவ்விஜயத்தில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன், போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

பருத்தித்துறை டிப்போ எதிர்



கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டது. கடந்த 12 ஆண்டுகாலமாக, அப்போதைய பிராந்திய முகாமையாளர்களால் உள்ளீர்க்கப்பட்டு நிரந்தர நியமனமின்றி பணியாற்றுவோருக்கு நிரந்தர நியமனம் வழங்க, கவனம் செலுத்தப்படும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

# கல்விகற்ற பாடசாலைகள் மீது நன்றியுணர்வுடன் நடப்பது அவசியம்



***பரந்தன் குறுாப் நிருபர்***

கல்வி கற்ற பாடசாலைகளுக்கு நன்றி உணர்வுள்ளவர்க ளாக நடக்கின்ற போதுதான், எதிர்வரும் சந்ததியும் அதன் வழி நடக்கும் என யாழ் ஊர்காற்துறை நீதிமன்ற நீதவான் ஜெகநாதன் கஜநிதிபாலன் தெரிவித்தார்.

முருகானந்தா கல்லூரியில் 1996 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதரம் கற்ற பழைய மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வு, ஓய்வுநிலை அதிபர்கள் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு என்பன (20) கிளி, முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஊர்காவற்துறை நீதிமன்ற நீதவான் கஜநிதபாலன் மேலும் தெரிவித்ததாவது,

இன்றைய சமூகத்தை வழிநடத்த வேண்டிய பொறுப்பு அனைவரிடத்திலும் உள்ளது.குறிப்பாக1996ம் ஆண்டில் கல்வி கற்ற மாணவர்கள் இணைந்து இந்த கௌரவத்தை வழங்கியுள்ளனர். பாடசாலைக் காலத்தில் ஆசிரியர்கள் மீதிருந்த பயமும் பற்றும் இன்றும் எங்களிடத்தில் இப்போதும் இருக்கின்றது.

இவ்வாறு ஒவ்வொருவரும் தாங்கள் கற்ற பாடசாலைகள் மீது, நன்றியுள்ளவர்களாக நடக்கும்போதுதான், எதிர்வரும் சந்ததியும் அதன் வழி நடக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

முருகானந்தா ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதி மற்றும் சிறப்பு விருந்தினர்கள் ஓய்வுநிலை ஆசிரியர்கள், அதிபர்கள், வான்ட் வாத்திய இசையுடன் 1996 இல் கா.பொ.த சாதாரணதர கல்வி கற்ற மாணவர்களால் விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.



## வெளிமாவட்டங்களுக்கு செல்லும்

# நடத்துநர்கள், சாரதிகளுக்கு தங்குமிட வசதிகள், அமைச்சர் உறுதி

வெளிமாவட்டங்களுக்கு குறிப்பாக கொழும்பு செல்லும் சாரதிகள், நடத்துநருக்கான தங்குமிட, கழிப்பறை வசதிகள் இரத்மலானை டிப்போவிலும் ஏனைய டிப்போக்களிலும் செய்து கொடுக்கப்படுமென அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கோண்டாவில் டிப்போவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுடன் நேற்று (21) விஜயம் செய்த அமைச்சர் இதுபற்றி தெரிவித்தார்.

இவ்விஜயத்தின்போது யாழ், டிப்போ எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தேவைகள் தொடர்பாக அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

பழுதடைந்துள்ள பேரூந்துகள் பிராந்திய டிப்போக்களைச் சேர்ந்த இயந்திரவியலாளர்கள்,திருத்துநர்களால் திருத்தப்படுவதை ஊக்குவிப்பதாகவும், தேவையான மின்கலங்கள், டயர்களை பெறுவது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் இதன் போது அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், பணியாளர்களின் நிரந்தர நியமனங்கள் தொடர்பாகவும், வெளிமாவட்டங்களுக்கு குறிப்பாக கொழும்பு செல்லும் சாரதிகள், நடத்துநருக்கான தங்குமிட கழிப்பறை வசதிகளை இரத்மலான டிப்போவிலும் ஏனைய டிப்போக்களிலும் செய்து கொடுப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

# கடல் வழியாக இந்தியாவுக்குச் சென்று கைவிடப்பட்ட எட்டுப்பேர் படையினரால் மீட்பு

***மன்னார் குறுப் நிருபர்***

இலங்கை, இந்திய கடற்பரப்பின் மூன்றாம் மணல் திட்டில் இரண்டரை மாத கைக்குழந்தையுடன் இறக்கிவிடப்பட்ட எட்டுப்பேர், இந்திய கடலோர காவல் படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று (21) ஞாயிற்றுக்கிழமை இவர்கள் மீட்கப்பட்டனர். கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் இந்த எட்டுப்பேரும் இறக்கிவிடப்பட்டதாக நம்பப்படுகிறது.

நாடு எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி நிலையையடுத்து,

இந்தியா, ஆஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாகச் செல்லும் கடல் பயணங்கள் அதிகரித்துள்ளன. மீட்கப்டப்பட்ட இந்த எட்டுப்பேரும் இவ்வாறு சட்டவிரோதப் பயணங்களில் ஈடுபட்டிருக்கலாம் எனவும் தெரிய வருகிறது.



பசியும், பட்டினியுமாக கைக் குழந்தையுடன் தண்ணீர் மட்டும் குடித்து மூன்று நாட்களாக மணல் திட்டில் தஞ்சம் அடைந்தவர்களையே, இந்திய கடலோர காவல் படை நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்டுள்ளது.

இவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிய வருகிறது.

ஏற்கனவே,134 இலங்கையர்கள் தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர். இதில், ஒரே ஒரு மூதாட்டி மட்டும் உயிரிழந்துள்ளார்.

# கலைஞர்களின் கைவண்ணங்கள் இயற்கையை நேசிக்க தூண்டுகிறது

***மாவத்தகம தினகரன் நிருபர்***

சிறந்த புகைப்படக் கலைஞர் மரணப்பதில்லை. ஹென்ரி மார்ட்டினைப்போன்று தொடர்ந்து உயிர் வாழ்ந்து கொண்டுதான் இருப்பான் என,காவேரிக் கலா மன்றத்தின் இயக்குநர் வண. யோசுவா அடிகளார் தெரிவித்தார்.

சர்வதேச புகைப்படத்தினத்தை முன்னிட்டு புகைப்படக் கலைஞரும் அதிபருமான அ. பங்கையற்செல்வனின் அழகிய வண்ணப்புகைப்படங்கள் தாங்கிய "நிழல்கள் சொல்லும் கதைகள்' ( ஒளி, ஓவியம் காட்டும் திசை) எனும் நூல் வெளியீட்டு வைபவத்தில் உரையாற்றும்போதே அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு,கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (20) பிற்பகல்,2.30 மணிக்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றிய காவேரிக் கலாமன்றத்தின் இயக்குநர் வண. யோசுவா அடிகளார் தொடர்ந்து உரையாற்றுகையில்

புகைப்படக் கலைஞர்கள் ஆபூர்வரமான படங்களைத் தருபவர்கள். அவர்களின் படங்கள் எல்லாம் எங்களை இந்தப் பிரபஞ்சத்தின் அழகின் வனப்பையும். இருப்பையும் ரசிக்கச் செய்வது மட்டுமல்லாமல், அதை நோக்கி எங்களை ஈர்க்கவும் செய்கிறது.

ஒருவரை நகல் எடுத்தால் அவர் இறந்து விடுவார் என்ற ஒரு நம்பிக்கை அன்றைய சமூகத்தில் இருந்தது. அதனை மூதாதையர்கள் மிகக்கவனமாகக் கையாண்டனர். சர்வதேச புகைப்படக் கலைஞர்களுடைய தினத்தில், ஹென்ரி மார்ட்டினை நினைவு கூருகின்றோம். அவர்கள் வரிசையில் பங்கயற்செல்வம் இராண்டாவது நாயகன்,

பங்கையற்செல்வன் ஒரு பிரபஞ்ச நேசன்.இயற்கை நேசியும் அவர் தான். அவரது படங்கள் எல்லாம் எங்களை இந்தப் பிரபஞ்சத்தின் அழகையும், வனப்பையும். இருப்பையும் ரசிக்கச் செய்கிறது. மட்டும் மல்ல அதை நோக்கி எங்களை ஈர்க்கவும் செய்கிறது.

தம்படங்களை பார்ப்பது மட்டுமல்ல. அவைகளைப் பற்றி மாணவர்களோடும் உரையாடுகிறார். இவைகளைப் பற்றி உங்கள் கருத்து என்னவென வினவுகிறார்.

அவ்வாறு காட்டி, பேசி இந்தப் படங்களை பார்க்கிறபோது உங்கள் உணர்வுகளில் எழுபவற்றை எழுத்தில் வடிப்பதற்கு சம்மதமா என்றும் மாணவர்களிடம் கேட்கிறார் பங்கையற்செல்வன். ஹேர்ஸ்டிங்கள் மாணவர்களுக்கு வழங்கியதுபோல, பங்கையற்செல்வனும் காலஅவகாசம் வழங்குகிறார்.

அத்தனை மாணவர்களும் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் தாங்கள் பார்த்த படங்கள் பற்றிய கருத்துக்களை பங்கையற்செல்வன் முன்பாக சமர்ப்பித்தனர்.

ஆனபடியினால் தான் ஹேர்ஸ்டிக்கும் பங்கையற்செல்வனுக்கும் தொடர்பு இருக்கிறது என்கிறேன். கலைஞர்களால்தான் இயற்கையை நேசிக்க முடியும் என்றார்.

# கிழக்கின் குரல்



## நன்னீர் மீன்பிடிப்பாளர்களை ஊக்குவிக்க சுற்றாடலைப் பாதுகாக்கும் சிரமதானப் பணி

*மட்டக்களப்பு விஷேட நிருபர்*



நன்னீர் மீன்பிடிப்பாளர்களை ஊக்குவிக்கும் நோக்கோடும், தூய்மையான சுற்றாடலை பேணும் வகையிலும் வாவிக்கரையோரம் மற்றும் பிரதான வீதியை அண்டிய பகுதிகள் நேற்று (21) சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டன.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட மட்டக்களப்பு – திருமலை பிரதான வீதியிலுள்ள பிள்ளையாரடி முதல் தன்னாமுனை வரையான பிரதேசங்களே சுத்தம் செய்யப்பட்டன. இவற்றில், வீசப்பட்டுக்கிடந்த பொலித்தீன், பிளாஸ்டிக், காகிதம், மிஞ்சிய உணவுகள் உள்ளிட்ட கழிவுகள் வேறாக சேகரிக்கப்பட்டு மாநகரசபையின் சுகாதார ஊழியர்களால் அகற்றப்பட்டன. இவை, அனைத்தும் திருப்பெருந்துறை திண்மக்கழிவு முகாமைத்துவம் செய்யும் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.

கொக்குவில் பனிச்சையடி இமையம் இளைஞர் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், அதன் தலைவர் என்.சுகிர்தராஜ் மற்றும் மட்டக்களப்பு மாநகரசபையின் உறுப்பினர்கள் க.ரகுநாதன், கௌரி தயாளகுமார் மற்றும் சிவம் பாக்கியநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிரமதானப் பணியை ஆரம்பித்து வைத்தனர்.

வாவிக்கரையை அண்டிய பிரதேசத்தில் மீன்கள், இறால்கள்; மற்றும் நண்டுகள் ஆகியவற்றின் விருத்திக்கு ஏற்றதாக கண்டல் தாவரங்கள் மற்றும் நிழல் தாவரங்கள் நடப்பட்டுள்ளன. பிரதான வீதியினூடாக வாகனம், மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்போர், வீதியோர வியாபாரிகள் மற்றும் பாதசாரிகள் பல்வேறு கழிவுகளை கண்டபடி வீசுவதால் சுற்றாடல் அசுத்தமாக்கப்பட்டு, பெரும் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைக் கட்டப்படுத்தும் நோக்குடனே, இந்த சிரமதானப் பணி மாநகரசபையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது.

## மனிதாபிமான உதவிப்பொருட்கள் கிண்ணியாவில் விநியோகம்



*தம்பலகாமம் குறுப் நிருபர்)*

தமிழ்நாட்டின் மனிதாபிமான உதவிகளின் மற்றுமொரு கட்டம் நேற்று (21) கிண்ணியா பிரதேசத்தை வந்தடைந்தது.

இந்த உலருணவுப் பொதிகளை பிரதேச செயலாளர், கிண்ணியா பிரதேச செயலகத்தில்

வைத்து பயனாளிகளுக்கு வழங்கினார். கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 31 கிராம சேவையாளர் பிரிவுக்குமாக 2500 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளும்750 குடும்பங்களுக்கு பால்மா பக்கெற்றுக்களும் வழங்கப்பட்டன. இன்று பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனியிடம் வழங்கி வைக்கப்பட்டன.

பைசல் நகர் கிராம சேவகர் பிரிவில் உள்ள 220 குடும்பங்களுக்கும், அண்ணல் நகர் கிராம சேவர் பிரிவில் உள்ள 180 குடும்பங்களுக்கும் நிவாரணங்களைப் பெற்றுக் கொண்டன.

இந்நிவாரண பொருட்கள் வழங்கும் வைபவத்தில், கிண்ணியா பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மாணவர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம்

*முள்ளிப்பொத்தானை குறுப் நிருபர்*

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து நேற்று (21) பாரிய ஆர்ப்பாட்டத்தை நடாத்தியது. இந்த ஆர்ப்பாட்டம் திருகோணமலை அலெக்ஸ் தோட்டத்திலிருந்து பேரணியாக ஆரம்பித்து, சர்வதே நிலையத்துக்கு முன்னால் வந்தடைந்தது.

பல்கலைக்கழகம் மாணவர்களை விடுதலை செய், அனைத்து போராட்டக்காரர்களையும் விடுதலை செய், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு, மனித உரிமையை அங்கீகரி போன்ற கோஷங்களை எழுப்பியவாறு, ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணியாக வந்தனர்.

## அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய பாடநெறிக்கான செயன்முறை கூடம் திறப்பு

*அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்*



அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கையடக்கத் தொலைபேசி திருத்தும் பயிற்சி நெறிக்கான நவீன வகுப்பறை மற்றும் செயன்முறைக் கூடம் கடந்த வெள்ளிக்கிழமை (19) கல்லூரியின் அதிபர் எம்.பீ.எம்.சிறாஜினால் திறந்து வைக்கப்பட்டது. நாடாவை வெட்டி வைபவ ரீதியாக அதிபர், இதனைத் திறந்து வைத்தார்.

தற்காலத் தொழிலுலகில், தொழில் வாண்மையுள்ள கற்கை நெறியாக கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி காணப்படுகிறது. மேலும் பெரும் வருமானமீட்டும் தொழிற்துறையாகவும் இப்பாடநெறி திகழ்வதாக மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய அதிபர் சிறாஜ் தெரிவித்தார்.

தேசிய தொழில் தகைமை (NVQ) தரங்கொண்ட இப்பாடநெறியை பூர்த்தி செய்பவர்கள், மிக எளிதில் வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் சுய தொழிலை மேற்கொள்வதற்கு ஏதுவாக அமைவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பிரதியதிபர் எஸ்.எச்.எம்.சல்மான் பதிவாளர் ஐ.பியாஸ், பகுதித் தலைவர்கள், கையடக்கத் தொலைபேசி திருத்தும் கற்கை நெறியின் புறப்போதனாசிரியர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், மாணவர்கள் பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

## பிரதி அதிபரும், ஊடகவியலாளருமான எஸ்.எல்.எம்.பிக்கீர் காலமானார்

*இறக்காமம் தினகரன் நிருபர்*



இறக்காமம் மதீனா வித்தியாலத்தின் பிரதி அதிபரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ்.எல்.எம். பிக்கீர் நேற்று (21) தனது 59 ஆவது வயதில், காலமானார். பிரதி அதிபரான இவர், அடுத்த 2023இல் ஒய்வு பெற்றுச் செல்ல இருந் தமை குறிப்படத்தக்கது.

இறக்காமம் பிரதேசச்தை சேர்ந்த இவர், அம்பாறை தினகரன் மத்திய குறுப் நிருபராக மிக நீண்டகாலம் கடமையாற்றிய வர். 1988ம் ஆண்டு தினகரன் பத்திரிகையின் அம்பாரை மத்திய குறுப் நிருபராக இணைந்து பணியாற்றி வந்ததுடன், வீரகேசரி, இலங்கை ஒலிபரப்பு கூட்டத்தாபனம், சூரியன் எப்.எம் மற்றும் சக்தி தொலைக் காட்சியிலும்

பிராந்திய செய்தியாளராகக் கடமையாற்றி வந்தார். இரண்டு ஆண் பிள்ளைகளின் தந்தையான, அன்னாரின் ஜனாசா நல்லடக்கம் நேற்று(21) அஸர் தொழுகையைத் தொடர்ந்து இறக்காமம் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அம்பாரை மாவட்ட ஊடகவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், மார்க்க அறிஞர்கள் கல்வியலாளர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் ஜனாஸா நல்லடக்கத்தில் கலந்து கொண்டனர்.

## இசங்கணிச்சீமையில் மரக்கறி அறுவடை விழா



*அக்கரைப்பற்று மத்திய நிருபர்*

சமுர்த்தி திணைக்களத்தினால் அக்கரைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் வசிக்கும் சமுர்த்தி பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், பயிர்ச் செய்கைகள் ஊக்குவிக்கப்பட்டன. இவ்வாறு செய்கை பண்ணப்பட்ட மரக்கறிப்பயிர்களை அறுவடை செய்யும் நிகழ்வு அக்கரைப்பற்று இசங்கணிச்சீமை கிராமத்தில் இடம்பெற்றது.

இதன்போது, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம்.றஸ்பி, சமுர்த்தி கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர். இப்பயிர்களின் விதைகளை, சமுர்த்தி திணைக்களம் வழங்கியிருந்தது.

## காத்தான்குடி பலநோக்கு கூட்டுறவுச்சங்க விஷேட பொதுச்சபைக்கூட்டம்

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

காத்தான்குடி பலநோக்கு கூட்டுறவுச்சங்க விஷேட பொதுச்சபை கூட்டம் (20.) சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கே,மகேஸ்வரனின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

பலநோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடந்த இக்கூட்டத்தில், சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கே, கிரிதரன், யூ. எல். எம். ஜெஸீம் ஆகியோரும் பங்குபற்றினர்.

இக்கூட்டத்தில், எதிர்வரும் மூன்று வருட காலத்திற்கான புதிய பணிப்பாளர்கள் சபைக்கான தெரிவும் இடம்பெற்றது

இதன்போது, எம். ஐ. எம். தையூப், எம்.எம்.றியாழ் எம்.எம்.எம். றுமைஸ், என்.எம்.இஸ்மாயில், எம். எல். ஆதம்பாவா, என். எம். ஜெமீல், எம்.ஐ.எம்.பைசர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். எம். ஏ.எப்.அஸீக்கா

எஸ்.எம்.பஸ்மினா ஆகிய பெண் உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதையடுத்து காத்தான்குடி பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைவரை தெரிவதற்கு வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. இதில், தலைவராக மீண்டும் எம். ஐ. எம். தையூப் தெரிவு செய்யப்பட்டதுடன் பிரதித் தலைவராக எம்.எம்.எம்.றுமைஸ் தெரிவானார்.



மொரட்டுவ மாநகர சபையின் ஆகஸ்ட் மாத அமர்வு மாநகர முதல்வர் சமன்லால் பெர்னாண்டோ தலைமையில் சபா மண்டபத்தில் நடைபெற்றது. மாநகர சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி தொடர்பிலான பல்வேறு தீர்மானங்கள் இதன்போது மேற்கொள்ளப்பட்டன. படம்: பாணந்துறை மத்திய குறுப் நிருபர்

## கோவில் மகா கும்பாபிஷேகம்



*பெரியபோரதீவு தினகரன் நிருபர்*

மட்டக்களப்பு நகரின் மேற்கே மண்முனை மேற்கு பிரதேசத்தின் நெடியமடு கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில், புதிதாக அமையப்பெற்ற பரிபால மூர்த்திகளான ஸ்ரீ ஆஞ்சநேயர் சுவாமிக்கும் ஸ்ரீ கல்யாண சுப்ரமணியருக்கும் ஆவர்த்தன மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (21) மிகச்சிறப்பாக இடம் பெற்றது.

எம்கடமை அமைப்பின் தலைவர் பரமேஸ் கவி பரமேஸ்வரனால் தர்மலிங்கம் சுபாஸ்கரன் ராஜு (சுவிஸ்) குடும்பத்திரிடமும் குணரெத்தினம் தயாழினி (சுவிஸ்) ஆகியோரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க இந்த ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

சிவாச்சாரியார் சிவஸ்ரீ சபாபதி சிவாதான் குருக்கள் தலைமையில் யாகம் பூசைகள், கிரியைகள் நடைபெற்றன.

வினாயகர் பூசையைத் தொடர்ந்து ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## உழவு இயந்திரம் விபத்து: மூவர் ஸ்தலத்தில் மரணம்

*றொட்டவெவ குறுப் நிருபர்*

திருகோணமலை பச்சனூர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இவ்விபத்து நேற்று முன்தினம் (20) காலை இடம்பெற்றுள்ளது. மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 64ம் கட்டை பச்சனூர் பகுதியிலுள்ள விகாரையின் சிரமதானப் பணிக்காகச் சென்ற உழவு இயந்திரமே விபத்துக்குள்ளானது.

உழவு இயந்திரத்தின் பெட்டியை கொழுவும் ஆணி கழன்று விழுந்ததாலே, இவ்விபத்து நிகழ்ந்தது. இதன் போது மூவர் உயிரிழுந்ததுடன், மூவர் அதிதீவிர சிகிச்சை பிரிவில் பெற்று வருகின்றனர்.

அத்துடன் சிறு காயங்களுக்கு உள்ளானவர்கள் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பில் மூதூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கல்முனை மைமுனா அரபுக் கலாபீடத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா

*நற்பிட்டிமுனை விசேட நிருபர்*

கல்முனை கிறீன்பீல்ட் வீட்த்திட்ட வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட மைமுனா அரபுக் கலாபீடத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா வெள்ளிக்கிழமை (19) மாலை மஃரிப் தொழுகையை தொடர்ந்து கல்முனை ஆசாத் பிளாசா மண்டபத்தில் இடம் பெற்றது. இந்த அரபுக்கலாபீடம்

கடந்த 2018 இல், நிறுவப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முன்னிலை அதிதியாக கல்முனை மைமுனா அரபு கலாபீடத்தின் அதிபர் மௌலவி ஏ.எல்.நாசரும், நிகழ்வுக்கு தலைமையாக மைமுனா அரபு கலாபீடத்தின் தலைவர் என். எம். நௌஷாட்டும், பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் முன்னாள் அதிபர், உலமா ஏ.சி.எம் சுபைர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எட்டு மாணவிகள் "மைமூனிய்யா ஆலிமா" பட்டம்பெற்று இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். இதில், கௌரவ அதிதியாக கல்முனை பிரதேச செயலக பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கல்முனை ஜும்மா பெரியபள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர் டாக்டர் கே.எம்.ஏ. அஸீஸ், உட்பட முக்கிய உலமாக்களும், புத்திஜீவிகளும், வர்த்தகப் பிரமுகர்களும் கல்விமான்களும் ஊடகவியலாளர்களும் பட்டம் பெறும் ஆலிமாக்களின் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

## தேசிய மக்கள் சக்தியின் முன்னாள் எம்.பி ஒட்டமாவடிக்கு விஜயம்

*கல்குடா தினகரன் நிருபர்*

தேசிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹெந்துன்நெத்தி கடந்த சனிக்கிழமை மாலை ஓட்டமாவடி பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டு மக்கள் சந்திப்பில் ஈடுபட்டார்.

ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.யு.எம்.இஸ்மையில் தலைமையில், ஓட்டமாவடி பிரதேசத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் பிரதேச கல்வியலாளர்கள், உலமாக்கள், ஊர்பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது நாட்டில் இடம் பெற்று வரும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் தெளிவுபடுத்தப் பட்டதுடன், கட்சியின் வளர்ச்சி தொடர்பபகவும், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது. கட்சி தொடர்பாக பிரமுகர்களின் கேள்விகளுக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பதில் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நிலைமை தொடர்பாகவும், அதிலிருந்து மீண்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தேசிய மக்கள் சக்தியிடம் திட்டமுள்ளதாகவும் அவர் தெளிவுபடுத்தினார்.

கலந்துரையாடலில் கலந்து கொண்ட பிரமுகர்களுக்கு நெருக்கடியை வெல்வதற்கான துரித அணுகுமுறை குறித்த நூல்களையும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வழங்கினார்.




# நெல் சந்தைப்படுத்தல் சபை 2 நாட்களில் 500 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு

**ஹாலிஎல விசேட நிருபர்**

நெல் சந்தைப்படுத்தல் சபை கடந்த வாரத்தில் 2 நாட்களில் 500 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

வருடத்தின் முதல் பருவத்தில் நடவு செய்த விவசாயிகளின் நெல் கொள்முதல் கடந்த 17ம் திகதி முதல் துவங்கியது. அதன் படி 19ம் திகதி மட்டும் 332 மெற்றிக் தொன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபையின் 73 களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நெல் அறுவடை செய்யப்பட்ட மற்றும் அறுவடை நடந்து வருகின்ற பகுதிகளில் களஞ்சியசாலைகள் திறந்து வைக்கப்படும்.

அதன்படி, அநுராதபுரம் மாவட்டத்தில் 27 கடைகள் தற்போது திறக்கப்பட்டுள்ளன.

நெல் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் 2000 மில்லியன் ரூபாவை செலவிடவுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். நெல்லுக்கு வழங்கப்படும் விலை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இரசாயன உரம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 2022 மற்றும் 2023 பருவங்களில் சோளம் பயிரிடும் விவசாயிகளை பதிவு செய்ய ஆரம்பித்துள்ளதாக விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் ஏ.எச்.எம்.எல்.அபேரத்ன தெரிவித்துள்ளார்.

ஒன்லைனில் மட்டுமே பதிவு செய்யப்படுவதால், www.agrarian.lk என்ற இணையத்தளத்திற்குச் சென்று உங்கள் தகவல்களை உள்ளிட்டு பதிவு செய்ய வேண்டும்.

சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு இரசாயன உரங்கள் தேவைப்படின் பதிவு செய்வது கட்டாயம் எனவும் வரும் 31ம் திகதியுடன் பதிவு காலம் முடிவடைகிறது எனவும் விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இணையவழி முறையின் கீழ் பதிவு செய்யும் போது ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் தமது பிரதேசத்திலுள்ள விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் அல்லது உழவர் சேவை நிலைய உத்தியோகத்தரின் உதவியை நாடலாம் என விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் ஏ.எச்.எம்.எல். அபேரத்ன மேலும் தெரிவித்தார்.



உலக படப்பிடிப்பாளர் தினத்தை முன்னிட்டு ஹட்டன் பீ வன் படப்பிடிப்பாளர் சங்கத்தினரால் பத்தனை டெரிக்கிளையார் பாடசாலைக்கு பெயர் பலகை ஒன்றை ஸ்தாபிப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. தலவாக்கலை குறூப் நிருபர்


## பெறுகை அறிவித்தல்

**சுகாதார அமைச்சு**

### சிலாபம் மாவட்டப் பொது வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையை நடைமுறைப்படுத்தல் – 2023

சிலாபம் மாவட்டப் பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவரினால் 2023ஆம் வருடத்திற்கான சிலாபம் மாவட்டப் பொது வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையை நடைமுறைப்படுத்துவதற்காக உரித்தான துறையில் அனுபவமுள்ள தரப்பினரிடமிருந்து விலைமனுக் கோரப்படுகின்றது.

1. கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, படிவக் கட்டணமான மீளளிக்கப்படாத தொகையை, சிலாபம் மாவட்டப் பொது வைத்தியசாலையின் கணக்காளர்/ சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுடன், தம் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2022.08.22 முதல் 2022.09.12 வரை மு.ப. 10.00 முதல் பி.ப. 2.00 வரை கணக்குப்பிரிவில் இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| | விலைமனுப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|
| வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலைக்காக | 5,000.00 |
| வைத்தியர்களின் உணவகத்திற்காக | 2,000.00 |

2. விலைமனுக்கள், மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனத் தயாரித்து இரண்டு உறைகளில் உள்ளிட்டு அவற்றை ஒரே உறையில் சேர்த்து முத்திரையிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில்" 2023ஆம் ஆண்டில் சிற்றுண்டிச்சாலைச் சேவை/ வைத்தியர்களின் உணவகச் சேவையை வழங்கல். மாவட்டப் பொது வைத்தியசாலை சிலாபம்" எனக் குறிப்பிட்டு, 2022.09.13 அன்று மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, தலைவர், பெறுகைக்குழு, மாவட்டப் பொது வைத்தியசாலை, சிலாபம்" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம்.
3. விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அதே இடத்தில் அவை திறக்கப்படுவதுடன், விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் அவ்வேளையில் சமுகமளித்திருக்கலாம்.
4. அரச ஒப்பந்தங்களை மீறியமைக்காக அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்ட நபர்களிற்கு விலைமனுப்படிவங்கள் வழங்கப்பட மாட்டாது.
5. மேலதிக விபரங்களிற்காக கீழ்க்காணப்படும் தொலைபேசி எண்களை அழைக்கவும். தொ.பே. இல. 032-2222261/ 032-2222721.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்டப் பொது வைத்தியசாலை,**
**சிலாபம்.**




இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் இலவச மருத்துவ முகாம் இரத்தினபுரி ஹப்புகஸ்தென்ன வேவல்கெட்டிய பகுதியில் இடம்பெற்றது. இந்த முகாமின் ஊடாக நூற்றுக்கணக்கான மக்கள் பயன் பெற்றுக்கொண்டனர். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஐதேகவின் இரத்தினபுரி பிரதம அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார் கலந்துகொண்டார்.

# பொகவந்தலாவ பகுதியை சேர்ந்தவர்கள் மீது தாக்குதல்; 6 பேர் படுகாயம்: நால்வர் கைது

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

பொகவந்தலாவ பகுதியில் இருந்து பலாங்கொடைக்கு தொழில்நிமித்தம் சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் நால்வர் பின்னவல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவ கெம்பியன் பகுதியை சேர்ந்தவர்களே இவ்வாறு இத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

பலாங்கொடை ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு தொழிலுக்கு சென்று மீள திரும்பியவர்கள் மீது (19.08.2022) பலாங்கொடை மாரதென்ன தோட்டப் பகுதியில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் 6 பேர் காயமடைந்துள்ளதாகவும், அவர்களில் ஐவர் பலாங்கொடை வைத்தியசாலையிலும், ஒருவர் இரத்தினபுரி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் பின்னவல பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் பயணித்த பஸ்ஸை பலாங்கொடை மாரதென்ன தோட்டப் பகுதியில் வைத்து மறித்து சிலர் தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இந்தநிலையில் தாக்குதலுக்கு இலக்கானவர்கள் அருகில் இருந்த வீட்டுக்குள் நுழைந்த நிலையில் வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு(20.08.2022) நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டமையை அடுத்து அவர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.


## பெறுகை அறிவித்தல்

**சுகாதார சேவைத் திணைக்களம் - சபரகமுவ மாகாணம்**

சபரகமுவ மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திற்கு 2022/2023 எதிர்வரும் வருட காலத்திற்கு மருந்துகள் உள்ளிடும் உறைகளை பெற்றுக்கொள்வதுடன் சம்பந்தப்பட்ட சபரகமுவ மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் 2022.09.14 மு.ப.10.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| விபரம் | தேவைப்படும் அளவு | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூ) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|
| நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருந்துகள் (மாத்திரை விண்ணப்ப) உள்ளிடும் உறைகள் 02 அளவுகளில் உள்ளதாக, GSM 60 வெள்ளை தாளில் (பிளேன்க் பேப்பர்) இல் தயாரிக்கப்பட்டு அச்சுடன் வழங்கப்படல் | பெசிறிய உறை (6cmX9cm) மாதாந்த தேவைப்பாடு - 1600000 (வருடாந்த தேவைப்பாடு) 19,200,000<br>II பெரிய உறை (10cmX12cm) மாதாந்த தேவைப்பாடு - 400,000 வருடாந்த தேவைப்பாடு - 4800,000 | 200,000.00 | 5000.00 |

03. 2022.08.23 முதல் 2022.09.12 வரை அரச வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை மற்றும் 2022.09.13 மு.ப.9.00 முதல் நண்பகல் 12.00 வரையான காலத்திற்குள் சபரகமுவ மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்ககப்படும். கேள்விப் பத்திரங்கள் பெறல் 2022.09.14 மு.ப.10.00 இற்கு முடிவுறும் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக குறித்த கட்டணத்தை இவ் அலுவலகத்திற்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியை வேறுவேறாக உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு கடித உறையில் இட்டு பொறியிடப்படல் வேண்டும் அத்துடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மருந்துகள் உள்ளிடும் உறைகள் வழங்குவதற்காக கேள்விகளை சமர்ப்பித்தல் -2022/2023" என்று குறிப்பிட்டு தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, மாகாண சுகாதார கேள்வித் திணைக்களம், இலக்கம் 75, தர்மபால மாவத்த, இரத்தினபுரி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

05. 2022.09.14 மு.ப.10.00 இற்கு முன் கிடைக்குமாறு பொறியிடப்பட்ட கேள்விப பத்திரங்களை பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் இல்லையெனில் குறித்த கேள்விப்பத்திரங்களை 2022.09.14 மு.ப.10.00 இற்கு முன் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கணக்குப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

06. 2022.09.14ம் திகதி கேள்விகளை ஏற்றுக்கொண்டு முடிவடைந்தவுடன் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அவ் வேளையில் சமுகமளிக்கலாம்.

07. கேள்விப் பத்திரங்களை எந்தக் கொடுப்பனவும் இன்றி இவ் அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

08. மேலதிக விபரங்களுக்கு இவ் அலுவலகத்தின் பிரதம கணக்காளரை அழையுங்கள்

தொலைபேசி இலக்கம் - 0452222277

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்,**
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான பெறுகைகள் | 16,410 | 3,518 |
| நிதி முதலீடுகளிலிருந்தான கொள்வனவுகள் | - | - |
| முதிர்வின்போது விற்பனைக்குள்ள நிதி முதலீடுகளிலிருந்தான பெறுகைகள் | - | - |
| அருவச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு | (2,100) | (1,070) |
| துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களின் முதலீட்டுப் பெறுகைகளின் தேறிய காசுப் பாய்ச்சல் | - | - |
| துணை நிறுவனங்களை அகற்றுவதிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | - | - |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களை அகற்றுவதிலிருந்தான பெறுகைகள் | - | - |
| துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபம் | - | - |
| ஆதன முதலீடுகளின் கொள்வனவு | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு (பயன்படுத்தியவை)** | **14,172** | **(10,569)** |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| வழங்கப்பட்ட சாதாரண மூலதனப் பங்கிலிருந்தான தேறிய பெறுகைகள் | - | - |
| வழங்கப்பட்ட ஏனைய பங்குடைமை கருவிகளிலிருந்தான தேறிய பெறுகைகள் | - | - |
| வழங்கப்பட்ட துணை நிறுவனக் கடன்களிலிருந்தான தேறிய பெறுகைகள் | - | - |
| துணை நிறுவனக் கடன்களின் மீள்செலுத்துகை | - | - |
| துணை நிறுவனக் கடன்களுக்குச் செலுத்திய வட்டி | - | - |
| கட்டுப்பாடற்ற ஆர்வங்களுக்குச் செலுத்திய பங்கிலாபம் | - | - |
| தாய் நிறுவன பங்குதாரர்களுக்குச் செலுத்திய பங்கிலாபம் | - | - |
| ஏனைய பங்குரிமை கருவி உரிமையாளர்களுக்குச் செலுத்திய பங்கிலாபம் | - | - |
| ஏனையவை | - | - |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு (பயன்படுத்தியவை) | - | - |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | (2,754) | (73,206) |
| குறித்த காலப்பகுதியின் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 63,900 | 105,156 |
| **குறித்த காலப்பகுதியின் முடிவிலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | **61,146** | **31,950** |

### 2022 ஜூன் 30ஆம் திகதியன்று உள்ளவாறான வைப்புகளின் பகுப்பாய்வு

| ஆயிரம் ரூபாய்களில் | வங்கி நடப்பு காலப்பகுதி 30-06-2022 | வங்கி முன்னைய வருடம் 31-12-2021 |
|---|---|---|
| **உற்பத்தி ரீதியில்** | | |
| கோரல் வைப்புகள் | - | - |
| சேமிப்பு வைப்புகள் | 172,100 | 249,911 |
| நிலையான வைப்புகள் | 64,940 | 215,774 |
| பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகளின் கடன்கள் (PSDB) | 300,940 | 298,979 |
| **மொத்தம்** | **537,980** | **764,664** |

### 2022 ஜூன் 30ஆம் திகதியன்று உள்ளவாறான கடப்பாடுகள், எதிர்பாராதவைகள் மற்றும் பெறுமதி குறைப்பு, கடன்கள் மற்றும் முற்பணங்களின் பகுப்பாய்வு

| ஆயிரம் ரூபாய்களில் | வங்கி நடப்பு காலப் பகுதி 30-06-2022 | வங்கி முன்னைய வருடம் 31-12-2021 |
|---|---|---|
| உற்பத்தி ரீதியில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | |
| உற்பத்தி வகை - உள்நாட்டு நாணயம் | | |
| மேலதிகப் பற்று | - | - |
| தவணைக் கடன்கள் | 1,020,827 | 1,259,200 |
| பெறவேண்டிய வாடகைக் குத்தகைகள் | 184,376 | 276,606 |
| கடன் அட்டைகள் | - | - |
| அடகுச் சேவைகள் | 167 | 2,129 |
| பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகளின் கடன்கள் (PSDP) | 967,707 | 974,715 |
| வீடமைப்புக் கடன்கள் | 17,345 | 28,280 |
| ஊழியர் கடன்கள் | 333,337 | 293,889 |
| **மொத்தம்** | **2,523,760** | **2,834,819** |
| நிலை ரீதியாக கடன்கள் மற்றும் முற்பணங்களின் பெறுமதி குறைப்பு | | |
| கழி: 1ம் நிலையின் கீழ் திரட்டிய பெறுமதி குறைப்பு | (38,959) | (81,707) |
| 2ம் நிலையின் கீழ் திரட்டிய பெறுமதி குறைப்பு | (81,716) | (17,867) |
| 3ம் நிலையின் கீழ் திரட்டிய பெறுமதி குறைப்பு | (1,349,963) | (1,378,567) |
| **கடன்கள் மற்றும் முற்பணங்களின் தேறிய பெறுமதி** | **1,053,123** | **1,356,677** |
| காலப்பகுதிக்கான பெறுமதி குறைப்பின் நகர்வுகள் | | |
| 1ம் நிலையின் கீழ் | | |
| ஆரம்ப மீதி | 81,707 | 110,947 |
| வருமானக் கூற்றில் மாற்றம் / (பதிவழிப்பு) | (42,749) | (29,240) |
| **இறுதி மிகுதி** | **38,959** | **81,707** |
| 2ம் நிலையின் கீழ் | | |
| ஆரம்ப மீதி | 17,867 | 75,874 |
| வருமானக் கூற்றில் மாற்றம் / (பதிவழிப்பு) | 63,848 | (58,007) |
| **இறுதி மிகுதி** | **81,716** | **17,867** |
| 3ம் நிலையின் கீழ் | | |
| ஆரம்ப மீதி | 1,378,567 | 1,393,001 |
| வருமானக் கூற்றில் மாற்றம் / (பதிவழிப்பு) | (21,596) | 9,456 |
| ஏனைய நகர்வுகள் | (7,008) | (23,891) |
| **இறுதி மிகுதி** | **1,349,963** | **1,378,567** |
| **மொத்த பெறுமதி குறைப்பு** | **1,470,638** | **1,478,142** |

### 2022 ஜூன் 30ஆம் திகதியன்றுள்ளவாறு தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டுக் குறிகாட்டிகள் (ஒழுங்குபடுத்தப்பட்ட அறிக்கையிடல் அடிப்படையில்)

| விடயங்கள் | 30/06/2022 | 31/12/2021 |
|---|---|---|
| **ஒழுங்குபடுத்தல் மூலதனப் போதுமை (ஆயிரம் ரூபாய்களில்)** | | |
| பொதுப் பங்குடைமை அடுக்கு 1 (Tier I) | 5,715,722 | 5,742,060 |
| அடுக்கு 1 (Tier I) மூலதனம் | 5,715,722 | 5,742,060 |
| மொத்த அடித்தள மூலதனம் | 5,715,722 | 5,742,060 |
| **ஒழுங்குபடுத்தல் மூலதன விகிதம் (%)** | | |
| பொதுப் பங்குடைமை அடுக்கு 1 மூலதனம் (%) (ஆகக் குறைந்த தேவை 7%) | 150% | 101% |
| அடுக்கு 1 மூலதன விகிதம் (ஆகக்குறைந்த தேவை 8.5%) | 150% | 101% |
| மொத்த மூலதன விகிதம் (ஆகக்குறைந்த தேவை 12.50%) | 150% | 101% |
| அந்நிய விகிதம் (Leverage ratio) (ஆகக்குறைந்த தேவை 3%) | 70% | 62% |
| **ஒழுங்குபடுத்தல் திரவத்தன்மை** | | |
| நியதிச் சட்ட திரவச் சொத்துக்கள் (ஆயிரம் ரூபாய்களில்) | 5,269,535 | 4,792,614 |
| நியதிச் சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம் % (குறைந்த தேவைப்பாடு 20%) | 700% | 742% |
| மொத்தக் கையிருப்பின் உயர் தரத்திலான திரவநிலைச் சொத்து - ரூபா '000 | 3,009,394 | 389,139 |
| திரவநிலை முழுத்தழுவல் விகிதம் (%) (ஆகக் குறைந்த தேவை 100%) | 6415% | 1548% |
| தேறிய நிலையான நிதி விகிதம் (%) (ஆகக் குறைந்த தேவை 100%) | 191% | 172% |
| **சொத்துக்களின் தரம் (கடன் துறையின் தரம்)** | | |
| மொத்த செயற்படாத முற்பணங்களின் விகிதம் % (தேறிய ஐய வட்டி) | 33% | 23% |
| மொத்த செயற்படாத முற்பணங்களின் விகிதம் % (ஐய வட்டியினதும் ஏற்பாடுகளினதும் தேறிய வட்டி) | 0.7% | -4% |
| கடன் பெறுமதி குறைப்பு (கட்டம் 3) விகிதம் % | 8% | 4% |
| கட்டம் 3 கடன் விகிதம் % இற்கான பெறுமதி குறைப்பு (கட்டம் 3) | 74% | 85% |
| **இலாபத் தன்மை** | | |
| வட்டி எல்லை % | 11% | 7% |
| சொத்துக்களின் மீதான வருவாய் (வரிக்கு முன்), % | 5% | 4% |
| பங்குடைமை மீதான வருவாய் % | 4% | 4% |

**அத்தாட்சிப்படுத்துகை:**

இலங்கை சேமிப்பு வங்கியைச் சேர்ந்த தலைவர், பொது முகாமையாளர்/பிநிஅ மற்றும் சிரேஷ்ட நிதித் திட்டமிடல் முகாமையாளர் ஆகிய கீழ் கையொப்பமிடப்பட்ட நாங்கள் கூட்டாக அத்தாட்சிப்படுத்துவதாவது:

(அ) இலங்கை மத்திய வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வடிவங்களுக்கிணங்கவே மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனையவை கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

**கேஷிலா ஜயவர்தன**
**(ஒப்பம்)** தலைவர்
15.08.2022

**M.A. சுஜித் பெர்னாண்டோ**
**(ஒப்பம்)** பொது முகாமையாளர்/பிநிஅ
15-08-2022

**H.K. எரஞ்சித் பத்மகுமார**
**(ஒப்பம்)** சிரேஷ்ட நிதித் திட்டமிடல் முகாமையாளர்
15-08-2022

**வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி, இல. 265, வோட் இடம், கொழும்பு-07.**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்
## இலங்கை புகையிரத சேவைகள்

**கடன் இலக்கம் : IDA - 63440**

1. இலங்கை சனநாயகக சோஷலிசக் குடியரசானது, CERC செயற்றிட்டத்தின் சுகாதார வசதிகளை மேம்படுத்தல் ஆகு செலவிற்காக, உலக வங்கியிடமிருந்து கடனொன்றைப் பெற்றுள்ளதுடன், பின்வரும் பெறுகையின் ஒப்பந்தத்திற்காக இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை செலவிடுவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகள் சார்பாக செயற்றிட்டத்தின் பெறுகைக் குழுவின் தலைவர் உள்ளூர் உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து இதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

**அட்டவணை 1**

| தொடர் இலக்கம் | கோவை இலக்கம் | விபரம் | படிவக் கட்டணம் ரூபா | விலைமனுப் பிணையம் ரூபா |
|---|---|---|---|---|
| 1 | SRS/F 7824 | கொழும்பு கோட்டை, மற்றும் மருதானை புகையிரத நிலையங்களுக்கு 450 எண்ணிக்கையான இருக்கைகளை வழங்கல் | 5,500.00 | 283,000.00 |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் முறைமையின் பிரகாரம் (NCB) இவ் விலைமனுக்கோரல் மேற்கொள்ளப்படும்.
4. 2022.08.22 முதல் 2022.09.12 வரை மு.ப. 09.00 முதல் பி.ப. 03.00 வரை வார வேலை நாட்களில், இதற்காக ஆர்வமும் தகைமையும் பெற்றுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரியில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன் விலைமனு ஆவணங்களைப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

   பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை)
   புகையிரத சேவைகள் பெறுகைக்கான
   உப திணைக்களம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10, இலங்கை.

   தொலைபேசி இல. : 94(11)2438078/ 2436818
   தொலைநகல் இல. : 94(11) 2432044
   மின்னஞ்சல் : srs.slr@gmail.com
   இணையம் : www.railway.gov.lk/tender2@railway.gov.lk

5. SRS/F. 7824 இன் மேலதிக தகவல்களிற்காக தயவு செய்து, கொழும்பு 10, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் உப திணைக்களம், பிரதான பொறியியலாளர் (பாதை மற்றும் வேலைகள்) ஐத் தொடர்பு கொள்ளவும்.

**அட்டவணை II**

| கோவை இலக்கம் | தகைமைகளின் தேவைப்பாடுகள் | விலைமனு முன்னோடிக் கூட்டடத்திற்கான திகதி மற்றும் முகவரி |
|---|---|---|
| SRS/F. 7824 | ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதவராக இருப்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.<br>(1) விலைமனுதாரர் செல்லுபடியாகும் வர்த்தகப்பதிவைப் பெற்றுள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>(II) விலைமனுதாரர் கடந்த (05) ஐந்தாண்டுகளில் குறைந்தபட்சம் 300 எண்ணிக்கையான பயனிகள் வாங்குகளை உற்பத்தி செய்திருத்தல் வேண்டும்.<br>மேலதிக விபரங்கள் விலைமனுப்படிவங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.. | 08.09.2022 பிரதான பொறியியலாளர் பாதை மற்றும் வேலைகள் உப திணைக்களம் கொழும்பு-10. |

6. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022.08.22 முதல் 2022.09.12 வரை பி.ப. 3.00 வரை (இலங்கை நேரம்) அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி எழுத்துருவ விண்ணப்பமொன்றை, இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் பெறுகை உப திணைக்களம் (பெறுகை) பிரதிப் பொது முகாமையாளருக்குச் சமர்ப்பித்து இதற்கான ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைமனுப் படிவத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.
7. அனைத்து விலைமனுக்களுடனும் விலைமனுப் பிணையமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்றுள்ள இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனைகளற்ற விலைமனுப் பிணையமொன்றாக இது இருத்தல் வேண்டும்.
8. 2022.09.13 அன்று பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்னர், பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் கிடைக்கச் செய்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும். அவ் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதிகள் சமுகமளித்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**செயற்றிட்டப் பெறுகைக் குழு,**
**புகையிரத சேவைகள் பெறுகை,**
**உப திணைக்களம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10.**

**தலைவர்,**
**செயற்றிட்டப் பெறுகைக்குழு,**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

## பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, களுத்துறை
# கேள்விக்கான அழைப்பு

பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக கீழ்க்காணும் வகைப்படுத்தலின் கீழ் வேறு வேறாக தகைமையுள்ள கேள்வி தாரர்களிடமிருந்து பொறியிடப்படட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வித் தொடர் இலக்கம் | கேள்வியின் பெயர் | அளவு | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| **Purchasing of OT Equipment** | | | | |
| BME/MEQ/PDG/OT/2022 | Diathermy Machine | 03 | 2,500.00 | 75,000.00 |
| **Purchasing of ICU & General Ward Equipment** | | | | |
| BME/MEQ/DG/ICU & Ward/2022 | Ultrasound therapy Machine | 01 | 1,500.00 | 10,000.00 |
| | Cushion Top Patient Trolleys | 03 | | |
| | Emergency Trolley (Progs) | 02 | | |
| **UP Grading of Existing Mobile X- Ray System To Mobile DR System** | | | | |
| BME/MEQ/PDG/X-RAY UP-GRADING/2022 | UPGrading of Existig Mobile X-Ray System To Mobile DR System | 012 | 2,500.00 | 62,000.00 |
| **Purchasing of Lab equipment** | | | | |
| BME/MEQ/PSSP/LAB -2/2022 | Coagulation Analzer | 01 | 2,500.00 | 75,000.00 |
| ` | Dark ground Microscope | 01 | | |

1. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் நடாத்தப்படும்.
2. கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கீழ்க்காணும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
   I. மேற்படி உபகரணங்களை விற்பனை செய்வதற்காக செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ்
   II. உற்பத்தியாளர் அல்லாதுவிடின் கேள்விதாரர்களுக்கு அவ் உருப்படியை விற்பனை செய்வதற்காக உற்பத்தியாளர்களிடமிருந்து எழுத்து மூல அனுமதி இருத்தல் வேண்டும்.
   III. குறைந்த பட்சம் இரண்டு வருடங்களுக்கு குறித்த வியாபாரங்களில் ஈடுபட்ட அனுபவம்
   IV. உபரகணங்களை விற்பனை செய்வதற்கான NMRA சான்றிதழ்
3. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை த.பெ. 29, கச்சேரி கட்டிடத்தொகுதி, 04ஆம் மாடி, பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் நிர்வாக அதிகாரியிடம் பெற்றுக் கொள்ள முடிவதுடன் மேற்படி மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை களுத்துறை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்கு செலுத்திய பின்பு கேள்வி ஆவணங்களை 2022.08.23 முதல் 2022.09.12 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் கொள்வனவு செய்யலாம்.
4. கேள்வி பிணையை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் களுத்துறை பெயரில் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த இலங்கைக்குள் செயற்படும் வர்த்தக வங்கியிலிருந்து மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

   முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வேறு வேறாக இரு உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் தனி முத்திரையிட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் Purchasing of OT Equipment இற்கு BME/MEQ/PDG/OT/2022 Purchasing of ICU & General warld Equipment இற்கு BNE/MEQ/PDG/ICU & Ward/2022, Upgrading of Existing Mobile X-Ray System to Mobile DR System இற்கு BNE/MEQ/PDG/ X-Ray UPGRADING/2022 Purchasing of Lab Equipment இற்கு BME/MEQ/PSSP/LAB-2/2022 என்றும் குறிப்பிட்டு 2022.09.13 மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
5. தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் கேள்விதாரர்கள் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
6. மேலதிக விபரங்களுக்கு பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையில் 034-2222610, 034-2222367, 038-2294700ஐ அழையுங்கள்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை களுத்துறை.**

### அற்றோணித் தத்துவப் பத்தர்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசில் ஸ்பெக்ட்றா இன்னொவெஷன்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிடட் (PV108069) இல. 2-9/1 8ஆம் தளம், யுனிட்டி ப்ளாசா, காலி வீதி, கொழும்பு -04 ஆகிய எம்மால் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட 11.03.2021 திகதி விசேட அற்றோணித் தத்துவப் பத்திரம் இல. 31A பொஸ்வெல் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு -06 இல் வசிக்கும் திரு. **மொஹமட் சித்கி மொஹமட் - பொது முகாமையாளர்** (ID No. 672583403V) என்பவருக்கு வழங்கப்பட்டதை இன்று முதல் மீளப் பெறுவதோடு இரத்தும் செய்யப்படுகின்றது என்பதை இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு மற்றும் சகலரும் அறிந்து கொள்வதற்காக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**ஸ்பெக்ட்றா இன்னொவெஷன்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிடட்**

### அற்றோணித் தத்துவப் பத்தரத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசில் ஸ்பெக்ஸ்சொ.∴ப்ட லங்கா (பிறைவேட்) லிமிடட் (PV00234998) இல. 901G, 7ஆம் தளம், யுனிட்டி ப்ளாசா, காலி வீதி, கொழும்பு -04 ஆகிய எம்மால் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட 5/04/2021 திகதி விசேட அற்றோணித் தத்துவப் பத்திரம் இல. 10A ∴பிலிசியா ஒழுங்கை, ஹப்புகொட கந்தான இல் வசிக்கும் திரு. **விக்கிரமசிங்க ஆராச்சிகே டொன் சந்துர யசருவான் விக்கிரமசிங்க** (ID No. 198620000986) என்பவருக்கு வழங்கப்பட்டதை இன்று முதல மீளப்பெறுவதோடு இரத்தும் செய்யப்படுகின்றது என்பதை இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு மற்றும் சகலரும் அறிந்து கொள்வதற்காக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**ஸ்பெக்ஸ்சொ.∴ப்ட் லங்கா (பிறைவேட்) லிமிடட்**

### காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் — 460) 7ம் பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது குறிப்பு இலக்கம்: DIVKE//LND/LND2/ACOUT/5/8**
**காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்: 4-3/8/2016PC/505**

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு உரிமை கூறுபவர்கள் தொடர்பில் குறித்த சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்ட ஈட்டு தொடர்பான பரிசீலனையை மேற்கொள்ளல் 2022.03.09ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு குளியாப்பிட்டிய கிழக்கு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் இடம் பெறும் எனவும் அந்த பரிசீலனைக்கு சமுகளிக்குமாறு உரிமை கூறுபவர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேலதிக விபரம் தொடர்பாக 2022.02.02ஆம் திகதி 2265/38ஆம் இலக்க அரசாங்க அதிவிஷேட வர்த்தமானியைப் பாாக்கவும்.

| | |
|---|---|
| மாவட்டம் | : குருநாகல் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : குளியாப்பிட்டிய - கிழக்கு |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 1115 கெகுனகொள்ள |
| கிராமம் | : கெகுனகொள்ள |
| காணியின் பெயர் | : பல்லியவத்த அல்லது பல்லியேஹேன |
| வரைபட இலக்கம் மற்றும் காணித்துண்டு இலக்கம் | : இ.கி.வ. 2560 மேலதிக இலக்கம் 5 தாள் இலக்கம் 5 இல் காணித்துண்டு இலக்கம் 137 |

**பிரதேச செயலாளர்,**
**குளியாப்பிட்டி கிழக்கு.**

# விலைமனுக் கோரல்

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**விலைக்கேள்வி இலக்கம் : 042/T/2021**

## நுவரெலியா பிதுறுதலாகளை ரேடார் மற்றும் தகவல்தொடர்பு பொறியியல் நிலையத்திற்காக சுய உதவி இணைப்புவழி ரேடார் கோபுரங்கள் வடிவாக்கம், வழங்கல் மற்றும் நிறுவுதல்

**(Design, Supply & Installation of Self Supporting Communication Tower for Radar and Communication Engineering Centre at Pidurutalagala, Nuwara Eliya.)**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) தனியார் கம்பனி சார்பாக அதன் தவிசாளரால் நுவரெலியா பிதுறுதலாகளை ரேடார் மற்றும் தகவல்தொடர்பு பொறியியல் நிலையத்திற்காக சுய உதவி இணைப்புவழி ரேடார் கோபுரங்கள் வடிவாக்கம், வழங்கல் மற்றும் நிறுவும் பொருட்டு முத்திரைக்குறியிடப்பட்ட விலைக்கேள்விகள் தகைமைகளைப் பெற்ற தகுதியுடைய விலைக்கூறுநர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ளவாறு இத்துடன் அழைக்கப்படுகின்றன.

இந்த 13.5M சுய உதவி இணைப்புவழி ரேடார் கோபுரங்கள் வடிவாக்கம், வழங்கல் மற்றும் நிறுவுதல் உள்ளிட்ட ஏனைய தொடர்புடைய நடவடிக்கைகளுக்காகத் தேவையான அனைத்து பொருட்கள் மற்றும் தொழிற்படை பெற்று, விவரக்குறிப்பீட்டில் உள்ளவாறும், விலைப்பட்டியல் மற்றும் வரைப்படங்களுக்கமைவாகவும் மற்றும் உரிய பொறியியல் திட்டமிடலுக்கமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒப்பந்தத்தின் கட்டுமான வேலைகளுக்குரிய கால எல்லை - 150 நாட்களாகும்.

கருத்திட்ட அமைவிடம் : நுவரெலியா பிதுறுதலாகளை ரேடார் மற்றும் தகவல்தொடர்பு பொறியியல் பிரிவு

தேசிய போட்டியிடல் விலைக்கோரல் நடைமுறைகளுக்கமைவாகவே, விலைக்கேள்விகள் இடம்பெறும்.

இவ் ஒப்பந்தம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைக்கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர் / தாபனமாக அமையப் பெறுதல் வேண்டும். மேலும் , இந்த விலைககேள்வியாளர்கள் கட்டிட நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA), (இதற்கு முன்னர், (ICTAD) பேரில் அழைக்கப்பட்ட), EM1 தரங்களில் (கட்டிடங்கள் கட்டமைப்பதற்காக) பதிவுசெய்யப்பட்ட குறித்த வகையிலான கட்டுமானப் பணிகள் தொடர்பான அனுபவமுள்ள ஒப்பந்ததாரராக இருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு, 2022.08.23 முதல் 2022.09.13 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், வழங்கல் தொடர் தலைவருக்கு திருப்பி தரப்படாத ரூபா 12,500/- (பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா) மாத்திரம் காசாகச் செலுத்தி மற்றும் எழுத்துபூர்வமான விண்ணப்பப்படிவமொன்றினை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்ட விலைக்கேள்வி இணைப்பு கோவையொன்றினைக் கொள்வனவு செய்துகொள்ள முடியும். அக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்களை மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கட்டணங்களின்றி பார்வையிடுவதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்படும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக சகல விலைக்கேள்வியாளர்களும், குறித்த ஒரு விலைக்கேள்விக்காக ரூபா ஒரு மில்லியன் மாத்திரம் (ரூபா. 1,000,000.00) பணமாக அல்லது இந்த ஆவணத்தில் 11 ஆம் பகுதியில் 16.2 பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்ட தாபனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்வியின் அடிப்படையிலான விலைக்கேள்வி பிணைமுறியுடன் குறித்த விலைக்கேள்வியினை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கு மற்றும் அவர்களினால் பெயரிடப்படுகின்ற பிரதிநிதிகளுக்கு 2022.08.30 ஆந் திகதி மு.ப 10.30 மணிக்கு நுவரெலியா பிதுறுதலாகளை ரேடார் மற்றும் தகவல்தொடர்பு பொறியியல் பிரிவில் நடைபெறுகின்ற ஆரம்ப விலைக்கேள்வி கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்விகள், 2022.09.14 ஆந் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் , தவிசாளர், பெறுகைக் குழு இலக்கம் 1, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற விலாசத்திற்கு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் கிடைக்கக்கூடியவாறு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் குறித்த நேரத்தில் விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் நேரம் முடிவடைந்ததும், விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகார பூர்வமான பிரதிநிதிகள் முன்னிலையில் அக்குறித்த விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்)கம்பனியின், சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவின், கிளைத் தலைவர் மூலம் 011-2263502, 011-2263507- என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் ஊடாக அல்லது தொலைநகல் இலக்கம் 011-2251356 மூலம் அறிந்து கொள்ள முடியும்.

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

# விலைமனுக் கோரல்

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**விலைக்கேள்வி இலக்கம் : 013/T/2022**

## 03 வருடங்களுக்காக வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியிற்காக வருடாந்த பறக்கும் முறை கண்காணிப்பு மற்றும் பறக்கை செல்லத்தக்கதாக்கல் தொடர்பாக சேவைகளை வழங்குதல்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால் 03 வருடங்களுக்காக வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியிற்காக வருடாந்த பறக்கும் முறை கண்காணிப்பு மற்றும் பறக்கை செல்லத்தக்கதாக்கல் தொடர்பாக சேவைகளை வழங்கும் பொருட்டு விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

அரசாங்க பெறுகை வழிக்காட்டல் நெறிமுறைக் கோவையின் போட்டியடிப்படையிலான சர்வதேச விலைக்கேள்வி நடைமுறையின் (ICB) தகவுத்திறன்களுக்கு அமைய விலைக்கேள்விகள் அழைக்கப்படும்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின் மூலம் அல்லது வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் www.airport.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியுமான விலைக்கேள்வி ஆவணங்களின் மூலம் விலைக்கேள்விகள் சமர்பித்தல் வேண்டும். திருப்பித்தரப்படாத விலைக்கேள்வி கட்டணமாக இலங்கை ரூபாவால் அமெரிக்க டொலர் (USD 75.00) பெறுமதிக்குச் சமனான தொகை செலுத்தப்பட வேண்டியதுடன் விலைக்கேள்வியாளரின் கையொப்பத்துடன் கூடிய உத்தியோகபூர்வ கோரிக்கை கடிதம் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கேள்வி ஆவணங்கள் www.airport.lk என்ற இணையத்தளத்தினூடாக 75.00 அமெரிக்க டொலர் திருப்பித்தரப்படாத விலைக்கேள்வி கட்டணம் இணையத்தினூடாக செலுத்துவதன் மூலமும் பதிவிறக்கம் செய்ய முடியும்.

2022.08.22 ஆந் திகதி முதல் 2022.09.27 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதி வரை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் விலைக்கேள்வி வெளியிடப்படும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்கும் காலம் 2022.09.28 ஆந் திகதி பி.ப 02.00 மணிக்கு முடிவடைந்ததும் விலைக்கேள்விகள் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் திறக்கப்படும்.

இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற இலங்கைக்குள் செயற்படும் வங்கியொன்றினால் வெளியிடப்பட்ட வங்கி பிணைமுறியின் வடிவில் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளருக்கு செலுத்தக்கூடியவாறு, இலங்கை ரூபா பதினைந்து இலட்சம் (ரூபா 1,500,000.00) கேட்டவுடன் செலுத்தக்கூடிய விலைக்கேள்வி பிணைமுறி விலைக்கேள்வியுடன் சமரப்பித்தல் வேண்டும்.

ஆரம்ப விலைக்கேள்வி பற்றிய விளக்கக்கூட்டம் 2022.09.02 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு வீடியோ கலந்துரையாடல் தொழில்நுட்பத்தினூடாக இடம்பெறும்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்விகள் 2022.09.28 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாக சமுகமளித்து அல்லது பதிவுத் தபால் மூலம் தவிசாளர், பெறுகைக் குழு 1, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற முகவரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கக்கூடிய விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் நேரம் முடிந்ததும் விலைககேள்வியாளர்கள் அல்லது அவர்களால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் அக்குறித்த விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்கள் மற்றும் இற்றைப்படுத்தல்கள் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், www.airport.lk இணையத்தளத்திற்கு பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியும்.

0112264103 அல்லது 0112264128 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு அழைப்பதனூடாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

# INVITATION FOR BIDS (IFB)

## POONAKARY PRADESHIYA SABHA
## KILLINOCHCHI DISTRICT

### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP) - LOAN NUMBER: P163305

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this loan to payments under the Contract for **Construction of Shopping Complex at Vaadiyady Junction (Stage I).**

02. The Chairman, Local Authority Project Procurement Committee (LAPPC) on behalf of the Poonakary Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **Construction of Shopping Complex at Vaadiyady Junction (Stage I)** as described below.

| No. | Contract No. | Contract Name | Tentative Estimated Cost (Rs. Mn) | Required Minimum CIDA Grade | Contract Period |
|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/KN/ POPS/2022/01 | Construction of Shopping Complex at Vaadiyady Junction (Stage I) | 12.16 | C6 | 161 Days |

03. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

04. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and should have registered in the specialty of **Building Construction** for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

05. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.

06. Interested bidders may obtain further information from **Chairman, Poonakary Pradeshiya Sabha, Vaadiyady, Poonakary, Kilinochchi** (T.P No: 0212284572, Fax No: 0212060855) and inspect the bidding documents at the address given below from **22nd August 2022** until **18th September 2022** between **09:00 Hrs** and **15:00 Hrs** on normal working days.

07. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Chairman, Poonakary Pradeshiya Sabha, Vaadiyady, Poonakary, Kilinochchi** from **22nd August 2022** until **18th September 2022** between **09:00 Hrs** and **15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Five Thousand Rupees (Rs. 5,000.00).** The method of payment will be by cash.

08 Bids shall be delivered in duplicate to the address **Chairman, Local Authority Procurement Committee, Poonakary Pradeshiya Sabha, Vaadiyady, Poonakary, Kilinochchi** at or before **14.00 Hrs** on **19th September 2022.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

09. Bids shall be valid up to **05th December 2022.** All bids shall be accompanied by a Bid Security of **Rs. 200,000.00.** Bid Security shall be valid up to **02nd January 2023.**

10. A pre-bid meeting will be held at 11.00 Hrs on **12th September 2022** at **Poonakary Pradeshiya Sabha, Vaadiyady, Poonakary, Kilinochchi.**

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC) Poonakary Pradeshiya Sabha,**
**Vaadiyady, Poonakary,**
**Kilinochchi.**

22.08.2022

நிதி அமைச்சு

**அபிவிருத்தி லொத்தர் சபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சீட்டிழுப்பு லொத்தர் சீட்டுக்களை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், அச்சடித்தல் மற்றும் வழங்கல்

## BID No - DLB/PRO/2022/16

ஓர் ஆண்டுக்கு தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து லக்ன வாசனா, அத கோடிபதி, ஷனிதா, சுப்பர் போல், அபிவிருத்தி அதிர்ஷ்டம், ஜயோதா, கப்ருக மற்றும் சஸ்ரி ஆகியவற்றின் வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், அச்சடித்தல் மற்றும் வழங்கல் ஆகியவற்றிற்காக அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பாக நிலையான அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவினால் (SCAPC) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
03. விலைமனுதாரர் ஒருவர் ஒன்று அல்லது அதற்கு மெல் சீட்டிழுப்பு வர்த்தகக் குறிகளுக்கு கூறுவிலை மேற்கொள்ள முடிகின்ற அதேநேரம் அச்சுத் திறன் அடிப்படையில் சீட்டிழுப்பு வர்த்தகக் குறியை கருத்தில் கொண்டு மிகத் தகுதிவாய்ந்த வழங்குநர்கள் தேர்வு செய்யப்படும்.
04. 2022.08.22 ஆம் திகதியிலிருந்து 2022.09.14 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணத்தின் தொகுதியொன்று இலவசமாக பரீட்சிக்க முடியும்.
05. 2022.08.22 ஆம் திகதியிலிருந்து 2022.09.14 ஆம் திகதி வரையும் திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும் (பொது விடுமுறைகள் நீங்கலாக) மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாக 60,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், வியாபார தலைப்புக் கடிதத்தில் கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு-2 என்ற முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
06. BDS இன் ITB 20.2 இல் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறான தொகைகளுக்கான 180 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுதுமான விலைமனுப்பிணையொன்றுடன் அல்லது வங்கி உத்தரவாத பாங்கில் பெறப்பட்டதும் கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதுமான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
07. இங்கே குறிப்பாக குறிப்பிட்டுள்ள விலைமனுவிற்காக '1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கமைவாக' பெறப்பட்ட ஒப்பந்த பதிவு சான்றிதழை அனைத்து விலைமனுதாரர்களும் கொண்டிருத்தல் வேண்டும்.
08. கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையில் 2022.09.01 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு நடைபெறும்.
09. விலைமனு ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து விபரமான விபரங்களையும் விலைமனுதாரர்கள் வழங்கல் வேண்டும்.
10. 2022.09.15 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் "தலைவர், நிலையான அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழு (SCAPC), அபிவிருத்தி லொத்தர் சபை மே/ பா., அபிவிருத்தி லொத்தர் சபை, இல. 356, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Bid for the Designing, Developing, Printing and Supplying of Draw Lottery tickets to the Development Lotteries Board" என்ற சொற்கள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் விலைமனுப் பெயர் மற்றும் விலைமனு இலக்கமும் குறிப்பிடப்படல் வேண்டும்.
11. அனைத்து விலைமனுக்களும் 2022.09.15 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மேலேயுள்ள முகவரியில் மேலதிகமான அறிவித்தலின்றி திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும்.
12. பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் எந்தவொரு அல்லது அனைத்து முன்வைப்புக்களையும் அல்லது ஒரு பகுதியை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கும் தேவைப்படின் மேலதிக தகவலை அழைப்பதற்கும் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் மேற்கொள்வதற்கான ஏகபோக உரிமையை நிலையான அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழு (SCAPC) கொண்டுள்ளது.
13. மேலேயுள்ள நேரம், திகதிகள் மற்றும் குறிப்பிட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பார்வையிடலாம். அத்துடன் www.dlb.lk என்ற அபிவிருத்தி லொத்தர் சபையின் இணையதளத்திலும் இதனை பார்வையிடலாம்.
14. மேலதிக விபரங்கள், தேவைப்படின், ITB 07 இல் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைக்கான உதவி பொது முகாமையாளரிடமிருந்து (பெறுகை) பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**நிலையான அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழு (SCAPC),**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டராட் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு-02.**
**தொலைபேசி: 011-4824824.**
**www.dlb.lk**
**2022.08.19**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## அரநாயக்க பிரதேச சபை

அரநாயக்க பிரதேச சபைக்குரித்தான அரம சந்தியிலிருந்து அசுபினிஎல்ல சிறிய மின்னுற்பத்தி நிலையம் வரையான வீதியை புனரமைப்பதற்காக ஹெம்மாத்தகம நீர் வழங்கல் திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள மானியத்தின் கீழ் இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலை விடயங்களுக்காக அரநாயக்க பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தலைவரினால் 2022-09-12ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | ஒப்பந்த இலக்கம் | வேலை விடயம் | வேலையின் சராசரி மதிப்பீட்டுப் பெறுமதி (ரூ. மில்) | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | ஒப்பந்தப் பதிவு |
|---|---|---|---|---|---|
| 01 | CSE/EST/WS/01/2022(i) | அரம சந்தியிலிருந்து அசுபினிஎல்ல சிறிய மின்னுற்பத்தி நிலையம் வரையான வீதியில் (0+045-0+090) கி.மீ. மற்றும் (0+277-0+295) கி.மீ. எனும் இடங்களில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் | 6.0 | 3500/- | C7/C6 |
| 02 | CSE/EST/WS/01/2022(ii) | அரம சந்தியிலிருந்து அசுபினிஎல்ல சிறிய மின்னுற்பத்தி நிலையம் வரையான வீதியில் (1+200) RHS கி.மீ. எனும் இடத்தில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் | 4.9 | 3500/- | C8/C7 |
| 03 | CSE/EST/WS/01/2022(iii) | அரம சந்தியிலிருந்து அசுபினிஎல்ல சிறிய மின்னுற்பத்தி நிலையம் வரையான வீதியில் (0+506-0+576) கி.மீ. மற்றும் (0+186-0+256) கி.மீ. எனும் இடங்களில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் | 4.7 | 3500/- | C8/C7 |
| 04. | CSE/EST/WS/01/2022(iV) | அரம சந்தியிலிருந்து அசுபினிஎல்ல சிறிய மின்னுற்பத்தி நிலையம் வரையான வீதியில் (0+254-0+274) LHS கி.மீ. எனும் இடத்தில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் | 3.6 | 3500/- | C8/C7 |
| 05. | CSE/EST/WS/01/2022(V) | அரம சந்தியிலிருந்து அசுபினிஎல்ல சிறிய மின்னுற்பத்தி நிலையம் வரையான வீதியில் STN(0+120),(0+730) மற்றும் (1+010) கி.மீ. எனும் இடங்களில் மதகுகளை நிர்மாணித்தல் | 3.1 | 3500/- | C8/C7 |

02. இந்த விலைக் கோரல் திறந்த போட்டி ரீதியிலான பெறுகை நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படும் என்பதுடன் இந்த வேலையின் மதிப்பீட்டுப் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவானதால் 04/2016(ii) மற்றும் 04/2016(iii)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை மற்றும் இயைபுடைய (CIDA) முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு விலைமனுதாரர்கள் தெரிவு இடம்பெறும். அதேபோல் அந்தச் சுற்றுநிருபத்திற்கு இயைபாக பின்னர் வெளியிடப்பட்ட 03/2020 மற்றும் 03/2020(i)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபமும் பெறுகை நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாகும். நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) வீதி நிர்மாணத்திற்காக குறித்த பெறுமதிக்கு பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் விலைக்கோரலுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியைப் பெறுவர்.
03. 2022-08-22ஆம் திகதி முதல் 2022-09-08 திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மேற்குறிப்பிட்ட வகையில் கட்டணங்களைச் செலுத்தி அரநாயக்க பிரதேச சபை அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம்.
04. சகல விலைமனுதாரர்களும் இந்த பெறுகைக்காக மேற்குறிப்பிடப்பட்ட பிணை முறி பெறுமதிக்கு இயைபான விலைமனுப் பிணை முறியாக இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 2022-09-12ஆம் திகதி 2023-01-07ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் தலைவர், அரநாயக்க பிரதேச சபை பயன் பெறுநர் எனும் பெயரில் பெற்றுக்கொண்ட விலைமனுப் பிணை முறியொன்றின் மூலம் அல்லது இயைபுடைய பெறுகையின் பெயரில் செலுத்தப்பட்ட விமைனுப் பிணை முறித் தொகையாக அரநாயக்க பிரதேச சபைக்கு இயைபுடைய தொகையைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனு ஆவணங்களுடன் பிணை முறியைச் சமர்ப்பிக்கும் போது பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது விலைமனுப் பிணை முறியின் மூலப் பிரதியின் மூலப் பிரதியைக் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. இந்த வேலைகள் தொடர்பான விபரங்களை அரநாயக்க பிரதேச சபைக்கு வருகை தந்து அல்லது 035 2258075, 035 2258876 எனும் தொலைபேசி இலக்கங்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். தேவையானவர்கள் வாரத்தின் வேலை நாட்களில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2022-09-12ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், பிரதேச சபை, அரநாயக்க எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அரநாயக்க பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான கடித உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
07. 2022-09-12ஆம் திகதி மு.ப. 11.15 மணிக்கு அரநாயக்க பிரதேச சபை அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
08. விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
09. சகல விலைமனுக்களும் 2022-12-12ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதேச சபை,**
**அரநாயக்க.**

**2022-08-22ஆம் திகதி**

**The largest Job Market in Sri Lanka**

**www.observerjobs.lk**

Your dream job awaits you...




Newspaper
Web
Social media
Networking
Headhunting

At your fingertips

**Widest reach for your employment advertisement**

**Email : info@observerjobs.lk Hotline: 1949**

**For more information**

**0777270012 / 0777270000 / 0112429314**



# ஆசியக் கிண்ணம்: இலங்கை டி20 குழாத்துக்கு திரும்பினார் சந்திமால்

## துஷ்மன்த சமீர இடம்பெற்றபோதும் உபாதை பற்றி கவலை

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இலங்கை குழாத்தில் தினேஷ் சந்திமால், வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோ மற்றும் மத்திய வரிசை துருப்பாட்ட வீரர் அஷேன் பண்டார ஆகியோர் அழைக்கப்பட்டிருப்பதோடு, இடது கை வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க டி20 குழாத்துக்கு முதல் முறை அழைக்கப்பட்டுள்ளார்.

இதில் கடந்த ஜூன் மாதம் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அணியில் இடம்பெறாத சகலதுறை வீரர் தனஞ்சய டி சில்வா மற்றும் சுழற்பந்து வீச்சாளர் ஜெப்ரி வன்டர்சே ஆகியோர் அணிக்குத் திரும்பியுள்ளனர்.

சந்திமால் இந்த ஆண்டு ஆரம்பத்தில் இடம்பெற்ற அவுஸ்திரேலியா மற்றும் இந்திய சுற்றுப்பயணங்களில் டி20 குழாத்தில் இடம்பெற்றபோதும் ஜூனில் சொந்த மண்ணில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 போட்டிகளில் அணியில் இருந்து வெளியேற்றப்பட்டார். இந்நிலையில் அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் சோபித்த சூழலிலேயே சந்திமால் ஆசிய கிண்ணத்தில் அணிக்குத் திரும்பியுள்ளார்.

இடது கை சுழற்பந்து வீச்சாளர் லக்ஷான் சந்தகன், வேகப்பந்து வீச்சாளர் நுவன் துஷார மற்றும் சகலதுறை வீரர்களான ரமேஷ் மெண்டிஸ் மற்றும் லஹிரு மதுஷங்க இந்த குழாத்தில் இடம்பெறவில்லை.

அணியில் இடம்பெறும் எதிர்பார்ப்பு அதிகம் இருந்த வேகப்பந்து வீச்சாளர்களான பினுர பெர்னாண்டோ மற்றும் கசுன் ராஜித்த ஆகியோர் உபாதை காரணமாக இடம்பெறவில்லை. என்றாலும் இலங்கைக் குழாத்தில் இடம்பெற்றிருக்கும் வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீராவின் கணுக்கால் காயம் முழுமையாக குணமடையாத நிலையிலேயே ஆசிய கிண்ண குழாத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். போட்டியில் ஆடுவதற்கான உடல் திறனை பெறுவதற்கு அவருக்கு போதுமான காலம் வழங்கப்பட வாய்ப்பு உள்ளது.

பினுர பெர்னாண்டோ மற்றும் கசுன் ராஜித்தவின் இடத்திற்கு அசித்த பெர்னாண்டோ மற்றும் பிரமோத் மதுசான் ஆகியோரை சேர்க்க விளையாட்டுத் துறை அமைச்சின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த உபாதைகள் அனுபவமற்ற வேகப்பந்து வீச்சாளர்களைக் கொண்ட இலங்கை அணிக்கு மேலதிக அழுத்தத்தை கொடுப்பதாக உள்ளது. டி20 சர்வதேச போட்டிகளில் புதிமுக வீரராக உள்ள பெர்னாண்டோ, 21 வயதான மதுஷங்க மற்றும் 19 வயது புதுமுகமான பத்திரன ஆகியோர் தவிர்த்து சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்ன மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் வேகப்பந்து வீச்சாளர்களாக உள்ளனர்.

எனினும் அண்மையில் முடிவுற்ற இலங்கை கிரிக்கெட் சபையின் அழைப்பு டி20 தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவராக முதலிடத்தை பெற்ற பெர்னாண்டோ அந்தத் தொடரில் மொத்தம் 10 விக்கெட்டுகளை சாய்த்தார்.

சுழற்பந்து வீச்சை பொறுத்தவரை இலங்கை குழாம் உறுதியாக உள்ளது. வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷன மற்றும் பிரவீன் ஜயவிக்ரமவுடன் வன்டர்சேயும் இணைந்துள்ளார். ஜூனில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடந்த டி20 போட்டிகளில் வன்டர்சே விளையாடாதபோதும் ஒருநாள் போட்டிகளில் சிறந்த முறையில் பந்துவீசியதோடு அண்மைய உள்ளூர் டி20 போட்டியில் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார்.

அழைப்பு டி20 தொடரில் சிறந்த திறமையை வெளிப்படுத்தியதை அடுத்தே அஷேன் பண்டாரவுக்கு இலங்கை அணியில் இடம் கிடைத்துள்ளது. 5ஆவது வரிசை துடுப்பாட்ட வீரராக ஆடிய அவர் தொடரின் நான்கு இன்னிங்ஸ்களிலும் 117.54 ஓட்ட வேகத்துடன் 134 ஓட்டங்களை பெற்றார். அவர் கடைசியாக இலங்கைக்காக 2021 ஜூலை மாதம் ஆடினார்.

அழைப்பு டி20 தொடரில் போதுமான ஓட்டங்களை குவித்திருந்தபோதும் துடுப்பாட்ட வரிசையில் நிரோஷன் திக்வெல்லவுக்கு இடம் கிடைக்கவில்லை. இந்தத் தொடரில் அதிக ஓட்டங்களை பெற்றவரான குசல் மெண்டிஸ், தனுஷ்க குணதிலக்க மற்றும் பத்தும் நிஸ்ஸங்க ஆகியோர் முன் வரிசைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். பானுக்க ராஜபக்ஷ மத்திய வரிசையை நிரப்புவார் என்று எதிர்பார்க்கலாம்.

**இலங்கை குழாம்:** தனுஷ்க குணதிலக்க, பத்தும் நிஸ்ஸங்க, சரித் அசலங்க, அஷேன் பண்டார, நுவனிது பெர்னாண்டோ, குசல் மெண்டிஸ், பானுக்க ராஜபக்ஷ, தினேஷ் சந்திமால், தனஞ்சய டி சில்வா, தசுன் ஷானக்க (தலைவர்), சாமிக்க கருணாரத்ன, வனிந்து ஹசரங்க, ஜெப்ரி வன்டர்சே, மஹீஷ் தீக்ஷன, பிரவீன் ஜயவிக்ரம, துஷ்மந்த சமீர, டில்ஷான் மதுஷங்க, மதீஷ் பத்திரன.

OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
44th
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ....................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ....................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ....................
வாக்களித்தவர் பெயர் : ....................
முகவரி : ....................
மொபைல் இல. : ....................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 27-08-2022 இல. 22




## எஸ்.எஸ்.சி அணி சம்பியன்

*கல்முனை மத்திய தினகரன் நிருபர்*



நிந்தவூர் இம்றான் விளையாட்டு கழகத்தினால் நடத்தப்பட்ட இம்றான் பிறீமியர் லீக் தொடரின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற சம்மாந்துறை எஸ்.எஸ்.சி விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது. நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (19) நடைபெற்ற இறுதிப் போட்டியில் எஸ்.எஸ்.சி கழகம், விளாஸ்டர் அணியை 91 ஓட்டங்களால் வீழ்த்தியது. வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 60000 ரூபா ரொக்கப் பணமும் வழங்கப்பட்டது.

## இறுதிப் போட்டியில் விம்பிள்டன்

*புத்தளம் தினகரன் நிருபர்*



ஜயாபார்ம் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடன் புத்தளம் உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் ஜயாபார்ம் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி போட்டிக்கு புத்தளம் விம்பிள்டன் கழகம் தகுதி பெற்றுள்ளது. தொடரின் முதல் அரையிறுதிப் போட்டி வெள்ளிக்கிழமை (19) மாலை புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. விம்பிள்டன் அணியை நாகவில்லு எருக்கலம்பிட்டி அணி எதிர்த்தாடியது. இறுதிவரை மிக விறுவிறுப்பான முறையில் நடைபெற்ற போட்டியில் விம்பிள்டன் அணி பெனால்டி முறையில் வெற்றியீட்டியது.

## சர்வதேச செய்திகள்

# துருக்கியில் அடுத்தடுத்து நிகழ்ந்த வாகன விபத்துகளில் 32 பேர் பலி

துருக்கியில் ஒரே இடத்தில் அடுத்தடுத்து இடம்பெற்ற இரு வாகன விபத்துகளில் குறைந்தது 32 பேர் உயிரிழந்ததோடு மேலும் 29 பேர் காயமடைந்தனர்.

தென்கிழக்கு மாகாணமான காசியான்டெப் பகுதியில் கடந்த சனிக்கிழமை (20) பயணிகள் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானது. இதில் 16 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

விபத்து நடந்த பகுதியில் மீட்பு பணியில் தீயணைப்புப் படையினர் மருத்துவக் குழுக்கள் மற்றும் பிற குழுவினர் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவர்கள் மீது மற்றொரு பஸ் மோதியது. இதில் அவசர கால பணியாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்களும் பலியாகினர். காயமடைந்த 29 பேரில் எட்டு பேர் ஆபத்தான நிலையில் உள்ளதாக துருக்கி சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.



## இந்தியாவுக்கு அதரவளிக்க தென்கொரிய தூதுவர் உறுதி



இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் அது அபிருத்தி அடைந்த நாடாக உருவெடுக்கும் பயணத்திற்கு தென்கொரியா நல்ல நண்பராக இருக்கும் என்று எதிர்பார்ப்பதாக அந்நாட்டின் இந்தியாவுக்கான தூதுவர் சான் ஜே பொக் தெரிவித்துள்ளார்.

தென்கொரியா மற்றும் இந்திய கலைஞர்களின் கண்காட்சி ஒன்றுக்கு வருகை தந்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். தென்கொரியா மற்றும் இந்திய தமது இராஜதந்திர உறவின் 50 ஆண்டு நிறைவை அடுத்து ஆண்டு கொண்டாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 13ஆவது இந்திய – பிலிப்பைன்ஸ் வெளிவிவகார மாநாடு நிறைவு



மணிலாவில் கடந்தவாரம் நடைபெற்ற 13 ஆவது இந்திய–பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு அலுவலக ஆலோசனை மாநாட்டில் இணை தலைவர்களாக இந்திய வெளிவிவகார செயலாளர் சவ்ராப் குமார் மற்றும் பிலிப்பைன்ஸ் துணைச் செயலாளர் தெரேசா லசாரோ பங்கேற்றனர். இதில் இருவரும் இரு தரப்பு உறவுகள் மற்றும் அவதானம் செலுத்த வேண்டிய புதிய பகுதிகள் பற்றி மீளாய்வு செய்தனர். இரு தரப்பினரதும் பல தரப்பு மாநாடுகளுக்கு ஆதரவை விரிவுபடுத்த இதன்போது இருவரும் இணங்கியதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

## சோமாலியாவில் 30 மணிநேர ஹோட்டல் முற்றுகை முடிவு

### 12க்கும் அதிகமானோர் பலி



சோமாலிய தலைநகர் மொகடிஷுவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் அல் ஷபாப் போராளிகளின் 30 மணிநேர முற்றுகையை அந்நாட்டு படையினர் நேற்று முடிவுக்குக் கொண்டுவந்தனர். இந்தத் தாக்குதலில் 12 க்கும் அகதிமான பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு மேலும் பலர் காயமடைந்தனர்.

இரு கார் குண்டு தாக்குதலை நடத்தி கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஹோட்டலுக்குள் ஊடுருவிய ஆயுததாரிகளுடன் சனிக்கிழமை முழுவதும் படையினர் சண்டையிட்டனர். "பாதுகாப்புப் படையினர் தற்போது முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளனர். ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர். கடந்த ஒரு மணி நேரத்திற்கு மேலாக கட்டடத்தில் இருந்து எம்மை நோக்கி எந்த துப்பாக்கிச் சூடும் இடம்பெறவில்லை" என்று பெயர் குறிப்பிடாத அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். தீவிர குண்டுத் தாக்குதல்களில் முற்றுகைக்கு உள்ளான ஹோட்டல் பெரும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளது.

அல் கொய்தாவுடன் தொடர்புபட்ட அல் ஷபாப் குழு சோமாலிய மத்திய அரசுக்கு எதிராக நீண்ட காலமாக போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திபெத் பொட்டலா அரண்மனைக்கு பூட்டு

இமயமலைப் பிராந்தியத்தில் அமைந்துள்ள திபெத்தில் கொவிட் பெருந்தொற்று பரவுதல் அடையாளம் காணப்பட்டுள்ளதைத் தொடர்ந்து லாசாவிலுள்ள லாமாக்கள் வசிக்கும் பொட்டலா அரண்மனை மூடப்படுள்ளது. கொவிட் தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் திபெத் பௌத்த தலைவர்களின் பொட்டலா அரண்மனை மூடப்படுவதாகவும் இது திறக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் பொட்டலா அரண்மனையின் வெய்சின் என்ற சமூக ஊடக தளம் அறிவித்துள்ளது. திபெத்தின் பொருளாதாரத்திற்கு பெரிதும் பங்களிக்கும் முக்கிய சுற்றுலாத் தலமே பொட்டலா அரண்மனையாகும்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஓகஸ்ட் மாதம் 22ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.